Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 167 வைகாசி 01ஆம் நாள் வியாழக்கிழமை 14 மே 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# ஆட்டையைப் போட்ட அரசியல்வாதி இன்று விசாரணைகள் ஆரம்பம்

## கொழும்பிலிருந்து 5 பேர் கொண்ட குழு யாழ். வரும்

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு தன்னார்வக் கொடையாளிகளால் வழங்கப்பட்ட நிவாரணங்களை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய வேட்பாளருமான ஒருவரின் ஆதரவாளர்களுக்கு வழங்கியதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு கொழும்பிலிருந்து 5பேர் கொண்ட குழு யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தரவுள்ளது.

02

## கொரோனா 893

### நேற்று நால்வர் அடையாளம்

கொழும்பு, மே 14

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் நால்வர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 889 இலிருந்து 893 ஆக அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளான 16 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 366 இலிருந்து 382 ஆக அதிகரித்துள்ளது. இலங்கை-

02

## வற்றாப்பளை பொங்கலுக்கு பக்தர்களுக்கு அனுமதியில்லை

முல்லைத்தீவு, மே 14

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் திருவிழாவில் இம்முறை பக்தர்களை அனுமதிப்பதில்லை யென முடிவாகியுள்ளது. புகழ்பூத்த வற்றாப்பளை கண்ணகையம்மன் ஆலய வருடாந்த பொங்கல் திருவிழா தொடர்பாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில்

02

## ராஜித நேற்றிரவு கைது

### 27 வரை விளக்கமறியல்

*வெலிக்கடை சிறையில் அடைப்பு*

கொழும்பு, மே 14

முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றிரவு சரணடைந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவிட்டார்.

வெள்ளை வான் கடத்தல் ஊடகவியலா

02

## விபத்தில் ஊடகவியலாளர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே 14

மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதியில், பெரியகல்லாறு நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மோட்டார் சைக்கிளுடன் உழவு இயந்திரம் மோதி விபத்

02

## கொரோனாவால் பெல்ஜியத்தில் யாழ்.வாசி சாவு

கொழும்பு, மே 14

பெல்ஜியத்தில், கொரோனா தொற்றால், யாழ்ப்பாணம், மயிலிட்டியை சேர்ந்த சுப்பையா பிரதீப் (வயது- 40) என்ற இளம் குடும்பத் தலைவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். இவர், இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

65 நாள்களாக கொரோனாவின் பிடியில் மருத்

02



## சமூக இடைவெளியை மறந்த 'குடிமக்கள்'

'பார்' திறப்புக்கு எதிராக பல தரப்புக்களும் கண்டனம்

யாழ்ப்பாணம், மே 14

நீண்ட நாள்களின் பின்னர் மதுபான விற்பனை நிலையங்களை திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியதையடுத்து, 'பெருங் குடிமக்கள்' திரண்டனர். சமூக இடைவெளி பேணப்படவில்லை. இந்தியாவிலும் இதேபோன்ற அனுமதி வழங்கப்பட்ட

02

## பிரதேச சபை ஊழியர் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், மே 14

நல்லூர் பிரதேச சபை ஊழியர் மீது நேற்று மாலை வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. படுகாயமடைந்த அவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும், சுன்னாகம் புகையிரத நிலைய வீதியை சேர்ந்த தே.நடேசு (வயது -44) என்பவர் மீதே வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச சபையில் இருந்து கடமை முடிந்து சுன்னாகத்தில் உள்ள தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த போது, இணுவில் காரைக்கால் இந்து மயா

02

## முடியை வழங்கிய ஹிருனிகா



கொழும்பு, மே 14

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருனிகா பிரேமசந்திர, புற்றுநோயாளிகளுக்கு 'விக்' தயாரிப்பதற்காக தனது தலை முடியை வழங்கியுள்ளார்.

புற்றுநோயானது நோயாளிக்கு மட்டுமன்றி

02

## கொரோனா நிலைமையில் தேர்தல் எப்படி நடத்துவது?

*முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையில் குழு*

யாழ்ப்பாணம், மே 14

கொரோனா இடர் நிலைமை தொடர்ந்தும் நீடித்தால் எவ்வாறு தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் ஆராய, முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மொஹமட் தலைமையில் 5 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள்

02

## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முறுகலோடு நேற்று ஆரம்பமாகியது

'தனிமைப்படுத்துவோம்' என்று 'ரெண்டிங்' மிரட்டல் விடுத்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தாயக தேசத்தில் நேற்று ஆரம்பமாகின. பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் எதிர்ப்புகள்- அச்சுறுத்தல்கள் வழமைபோன்று இருந்தது. அதனையும் மீறி நினை

02



## ஆட்டையைப்...

கொரோனா காரணமாக தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. அரசின் உதவிகள் யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு கிடைத்திருக்காத சூழலில் தன்னார்வக் கொடையாளிகளால் நிவாரணப் பொருள்கள் மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்க வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள், யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வேட்பாளருமான ஒருவரின் ஆதரவாளர்களுக்கு மாவட்டச் செயலக அதிகாரிகளால் வழங்கப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரிப்பதற்காகவே 5 பேர் கொண்ட குழு கொழும்பிலிருந்து வருகை தரவுள்ளது. இந்தக் குழுவினர் இன்றைய தினம் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் விசாரணைகளை ஆரம்பிப்பார்கள் என்று தெரியவருகின்றது. தொடர்ச்சியாக இந்த விசாரணைகள் இடம்பெறும் எனவும், பல அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் இவர்கள் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளதுடன், விசாரணைகளையும் நடத்தவுள்ளனர். (ஒ,5,105)

## விபத்தில்...

துக்குள்ளானதில் ஊடகவியலாளர் ஒருவர் உயிரிழந்தார்.

தீபம் ஊடக நிறுவனத்தில் பணியாற்றி வரும் திருகோணமலை உட்துறைமுக வீதியைச் சேர்ந்த 28 வயதுடைய மிதுன் என்றழைக்கப்படும் ஈ.மிதுன்சங்கர் என்பவரே உயிரிழந்தார்.

மிதுன் மற்றும் அவரது நண்பர்களான இரு ஊடகவியலாளர் உட்பட 4 பேர் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தாறுமூலையில் இருந்து கல்முனைக்கு உறவினர் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தனர். பெரியகல்லாறு நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகில் மோட்டார் சைக்கிள்களை வீதி ஓரத்தில் நிறுத்திய போது பின்னால் வந்த உழவு இயந்திரம் மோதியது. இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற ஊடகவியலாளர் படுகாயமடைந்த நிலையில் களுவாஞ்சிக்குடி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

உழவு இயந்திர சாரதியை கைது செய்துள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,5)

## கொரோனாவால்...

துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார். (ஒ,5)

## ராஜித...

ளர் சந்திப்பு தொடர்பான வழக்கில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்குக் கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பிணை உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்றுக் காலை இரத்துச் செய்தது.

ராஜிதவுக்குக் கடந்த டிசெம்பர் 24ஆம் திகதி பிடியாணை வழங்கப்பட்ட நிலையில் அவர் டிசெம்பர் 26ஆம் திகதி லங்கா தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் டிசெம்பர் 27ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் டிசெம்பர் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மருத்துவமனையில் தொடர்ந்தும் சேர்க்கப்பட்டிருந்த அவருக்கு, டிசெம்பர் 30ஆம் திகதி, கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க உத்தரவிட்டது.

ஆயினும், நீதிவான் நீதிமன்றத்தின் பிணை உத்தரவை எதிர்த்து, சட்டமா அதிபரால் கடந்த ஜனவரி 8ஆம் திகதி மீளாய்வு மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தால் ராஜித சேனாரத்னவுக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவை நீதிபதி மஞ்சுல திலகரத்ன இரத்துச் செய்தார்.

அத்துடன், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன உத்தரவிட்டார்.

இதையடுத்து முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தமாறு கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்னவால் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்றுப் பிற்பகல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தநிலையில், ராஜித சேனாரத்ன தானாகவே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றிரவு முன்னிலையானார். அவரைக் கைதுசெய்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றிரவே கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதன்பின்னர் அவர் வெலிக்கடை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார். (ஒ,5,22)

## முடியை...

அவரது குடும்பத்தினருக்கும் அன்பிற்குரிய அனைவருக்கும் மிகவும் வேதனையை ஏற்படுத்தும் எனவும் அவர்களின் வலி, வேதனை போக்க முடியாவிட்டாலும் ஏதேனும் ஓர் வகையில் உதவ முடியும் எனவும் ஹிருனிகா தெரிவித்துள்ளார். தான் தனது தலை முடியை, புற்று நோயாளிகளுக்கு வழங்குவதற்கு தீர்மானித்ததாகத் தெரிவித்துள்ளார். தங்களது தலை முடியை வெட்டும் இளம் பெண்கள் அவற்றை வீசி எறியாது, இவ்வாறு புற்றுநோயாளிகளுக்கு வழங்கினால் அது பயனுள்ளதாக அமையும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஹிருனிகா தனது முகநூலில் இது தொடர்பில் பதிவொன்றை இட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## முள்ளிவாய்க்கால்...

வேந்தல் சுடர் ஏற்றப்பட்டது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெறும் நிலையில், நினைவேந்தலில் பங்குபற்றியோரை 'தனிமைப்படுத்துவோம்' என்று கூறி அச்சுறுத்தியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போர் வன்னிப் பெரு நிலப் பரப்பில் இடம்பெற்றது. பல லட்சம் தமிழ் மக்கள் ஒடுங்கிய நிலப்பரப்புக்கள் முடக்கப்பட்டு, இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினரால் கொன்றொழிக்கப்பட்டனர். மனிதாபிமானப் போர் நடவடிக்கை என்ற பெயரில் மனித உரிமை மீறல்களும், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களுமே அங்கு அரங்கேறின. முள்ளிவாய்க்கால் மண்ணில் நந்திக்கடலுடன் போர் முடிவுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

லட்சக் கணக்கில் கொன்றொழிக்கப்பட்டு, பல ஆயிரக் கணக்கில் காணாமல் ஆக்கப்பட்டு, இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் காணாமல் ஆக்கப்பட்டு என்று எல்லாத் துயரங்களையும் தமிழர் மீது சுமத்திய முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஒவ்வொரு ஆண்டும் நினைவேந்தல் செய்து வருவது வழமை.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழ் இனப் படுகொலை இடம்பெற்ற முக்கிய இடங்களில் நினைவேந்தலை நடத்துவது வழமை. இம்முறை கொரோனா அச்சம் காரணமாக இறுதி நாள் நிகழ்வை மாத்திரம் நடத்துவதாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் ஈகச்சுடரேற்றி அஞ்சலிக்கும் இடங்களில் ஒன்றான செம்மணியில்நேற்றுநினைவேந்தலைக் கடைப்பிடித்தனர்.

நினைவேந்தலில் பிரதான பொதுச் சுடரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னப்பலம் ஏற்றினார். தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

அங்கு வந்த பொலிஸார் மற்றும் சீருடையினர் நினைவேந்தலை தடுத்து நிறுத்த முயற்சித்தனர். அங்கு கலந்து கொண்டிருந்தவர்களை அவர்களது அனுமதியின்றி ஒளிப்படங்களை எடுத்தனர். தடுத்து நிறுத்தும் முயற்சி தோல்வியடைந்ததும் பங்கேற்றவர்களின் பெயர், முகவரிகளைப் பெற்றுக் கொண்டனர். அவர்களைத் தனிமைப்படுத்தப் போவதாகக் கூறிச் சென்றனர்.

இதேவேளை முள்ளிவாய்க்கால் பெருந்துயர் அரங்கேறிய முல்லைத்தீவு மண்ணிலும் நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. (ஒ,5,19,20)

## பிரதேச...

னத்துக்கு அருகில் வைத்து வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான ஊழியர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வாள்வெட்டு மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## கொரோனா...

ஆணைக்குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் எதிர்வரும் 18ஆம் மற்றும் 19ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதன் பின்னர் ஆணைக்குழு மீண்டும் கூடியே தேர்தல் திகதியை தீர்மானிக்கவுள்ளது.

இதற்கிடையில், கொரோனா அச்சம் தொடர்ந்தும் நீடித்தால் எப்படி தேர்தலை நடத்துவது, எவ்வாறான முன்னாயத்தங்களை மேற்கொள்வது என்பது தொடர்பில் அராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க முன்னாள் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் மொஹமட் தலைமையில் 5பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது அறிக்கைகளைச் சமர்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,105)

## வற்றாப்பளை...

நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலர், கரைத்துறைப்பற்று பிரதேச செயலர், சுகாதார மருத்துவ அதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர் இதில் கலந்து கொண்டனர்.

கொரோனா நிலவரத்தை அடிப்படையாக கொண்டு, இம்முறை ஆலய பொங்கல் திருவிழாவில் பொதுமக்களை அனுமதிப்பதில்லையென முடிவாகியது. பக்தர்கள் வீடுகளில் இருந்து வழிபாடுகளில் ஈடுபடுமாறும், பொங்கல் திருவிழா இடம்பெறாமல், ஆலயத்தின் சம்பிரதாய கிரியைகள் மாத்திரம் இடம்பெறும் எனவும் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ,5)

## சமூக...

மைக்கு எதிராக சமூக வலைத் தளங்களில் கண்டனங்கள் எழுந்ததைப் போன்று இங்கும் காரசாரமான கண்டனங்கள் கிளம்பியுள்ளன.

மதுபான விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கு அரசு நேற்று அனுமதி வழங்கியது. காலை 11 மணிக்குப் பின்னர் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஊரடங்கு நடைமுறையில் உள்ள கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் பல்பொருள் அங்காடிகளில் மதுபான விற்பனை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

காலை 10 மணியளவிலேயே வடக்கில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் முன்பாக 'பெருங் குடிமக்கள்' திரண்டனர். சமூக இடைவெளி எதுவும் பேணப்படவில்லை. சில மணி நேரங்களின் பின்னரே பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் 'பெருங்குடிமக்களை' ஒழுங்குபடுத்தினர்.

'உணவகங்கள் திறப்பதற்கு அனுமதி மறுத்துள்ள அரசு மதுபான விற்பனை நிலையங்களை திறக்க அனுமதித்தது ஏன்?' என்று சமூக வலைத் தளங்களில் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (ஒ,5,105)

## கொரோனா...

யில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 893 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 502 நோயாளிகள் 7 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,5,22)

# மே 18 திங்கட்கிழமையன்று
# கோவில்களில் மணியடித்து வீடுகளில் தீபமேற்றுங்கள்

யாழ்ப்பாணம், மே 14

**முள்ளிவாய்க்கால் தினமான எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7மணிக்கு அனைத்து வணக்கத்தலங்களிலும் மணி ஒலி எழுப்பி பேரவலத்தை நினைவேந்துங்கள். அதேநேரத்தில் வீடுகளில் தீபங்கள் ஏற்றி முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூருங்கள்.**

இவ்வாறு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு மக்களிடம் கோரியுள்ளது.

முள்ளிவாய்க்கால் பேரவல நிலைமையை நினைவுபடுத்தும் வகையில் அன்றையதினம் கஞ்சி தயாரித்து பகிர்ந்து கொள்ளுமாறும் தமிழ் மக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

சிங்களபௌத்த அரசு 2009 இல் முள்ளிவாய்க்காலில் திட்டமிட்டு தமிழினத்தை வயது வேறுபாடின்றி, பால் பாகுபாடின்றி துடிதுடிக்கக் கொன்றொழித்திருந்தது. அந்தப் போர் நிறைவின் 11ஆம் ஆண்டுநிறைவு எதிர்வரும் 18ஆம் திகதி.

அன்றையதினம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மைதானத்தில் உணர்வெழுச்சியுடன் முற்பகல் 10:30 மணிக்கு நினைவு கூரப்படும்.

இது தேசிய நினைவெழுச்சி நாள். உட்பூசல்களைத் தவிர்த்து தமிழ்த் தேசியத்தால் ஒன்றுகூடும் நாள். கொத்துக்கொத்தாய் கொல்லப்பட்ட எம் உறவுகளுக்காய் நீதி வேண்டிய பயணத்தில் தமிழராய் ஒன்றிணையும் நாள்." என்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (த)

## சில நாள்கள் மழை தொடரும்

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக, அடுத்த சில நாள்கள் நாடு முழுவதும் மழையுடனான வானிலை சற்று அதிகரிக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மேல் மற்றும் தென் மாகாணங்களில் கரையோரப் பிரதேசங்களில் காலை வேளையிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும். மத்திய, சப்ரகமுவ, ஊவா, தென் மற்றும் மேல் மாகாணங்களிலும் அம்பாறை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ அளவான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகள் மிதமான கொந்தளிப்பாகக் காணப்படும். காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான ஆழம் கூடிய கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகவும் காணப்படும் என்று அவதான நிலையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இளைஞர் மீது தாக்குதல்

புதுக்குடியிருப்பு, மே14

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தேவிபுரம் பாரதி வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் மாலை இளைஞர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த 34 வயது இளைஞனை, இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மூடிக் கட்டியவாறு வந்த 4 பேர் தாக்கியுள்ளனர். அவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். காயமடைந்த இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசாவின் ஆதரவாளர் என்று கூறப்படுகின்றது. (ஒ.5,19)

# கொரோனாவுடன் உலாவும் மக்கள்!

## தொற்று நோய் தடுப்புப் பிரிவு எச்சரிக்கை

கொழும்பு, மே 14

கொவிட் -19 வைரஸ் தொற்றுப்பரவல் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும், எந்தவித அடையாளமும் காட்டாது தமது உடலில் வைரஸைக் காவிக் கொண்டு திரியும் மக்கள் நாட்டில் உள்ளனர் என்று தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.

கொவிட் -19 வைரஸ் தொற்றுநோய் குறித்த வைத்திய பரிசோதனைகள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகில் கொவிட் -19 வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்திய நாடுகளில் இலங்கை முன்னிலையில் உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனம் முதற்கொண்டு இந்த காரணிகளைக் கூறி வருகின்றனர்.

நாட்டில் வைரஸ் தொற்றாளர்களைத் தடுப்பதில் பாதிக்கப்பட்ட நபர்களைத் தேடிப்போய் கண்டறிந்து அவர்களைத் தனிமைப்படுத்தும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், சமூகப் பரவலாக இது மாற்றமடைவது தடுக்கப்பட்டது.

சமூகத்தில் பரவலாக நோயாளர்களைக் கண்டறிய முடியாது. ஆனால் சமூகப் பரவல் இல்லை என்ற காரணத்தால் மக்கள் சகஜமாக நடமாட முடியாது.

மக்களின் உடலில் இன்னமும் கொரோனா வைரஸ் காவப்பட்டுக் கொண்டே உள்ளது. எந்தவித அடையாளமும் காட்டாது தமது உடலில் வைரஸைக் காவிக் கொண்டு திரியும் மக்கள் நாட்டில் உள்ளனர்.

அவ்வாறான நிலையில் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் செயற்பாடுகளில் மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டும். மக்களிடம் இன்னமும் வைரஸ் உள்ளது என்பதை மனதில் வைத்துக் கொண்டு சமூக இடைவெளியைக் கடைப்பிடித்துச் செயற்படவேண்டும்.

கொழும்பு- கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. குறிப்பாக கொழும்பு கம்பஹா மாவட்டங்கள் இன்னமும் வைரஸ் தொற்றுப்பரவல் அச்சுறுத்தல் உள்ள் மாவட்டங்களாகவே அடையாளப்படுத்தப்படுகின்றது.

இந்த மாவட்டங்களில் ஊரடங்கு நீட்டிக்கப்பட்டாலும், மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் அனைத்தையும் முன்னெடுக்கத் தேவையான சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலக வேலைகள் என அனைத்தும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டாலும் எப்போதாவது, எங்கோ ஒரு பகுதியில் கொவிட் 19 தொற்றுநோயாளர் கண்டுபிடிக்கப்படுவார். அவ்வாறு அடையாளம் காணக்கூடிய அறிகுறிகள் தென்பட்டுக்கொண்டே உள்ளன-என்றார். (க)

## கண்ணதாசன் வழக்குத் தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லை

### மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

கட்டாய ஆள் சேர்ப்பில் ஈடுபட்டார் என்று குற்றத்துக்காக 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கண்ணதாசனின் வழக்குத் தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மேல் நீதிமன்றில் முன்னெடுக்கப்பட்ட வழக்கில் புனர்வாழ்வு வழங்கி விடுவிக்கப்பட்ட கண்ணதாசன் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பில் முறைப்பாட்டாளர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனால் ஏற்கனவே எழுத்தில் சமர்ப்பணம் முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை நியாயப்படுத்த முடியவில்லைஎன்றும்வழக்கைமீண்டும்விசாரணைக்கு உட்படுத்தவேண்டும்எனவும்சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

நடந்து முடிந்த விசாரணையை நியாப்படுத்த முடியவில்லை என்று ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட வேண்டுமே அன்றி மீள் விசாரணைக்கு இணங்க முடியாது என்றுஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை குற்றவாளியும் மன்றுக்கு அழைத்து வரப்படவில்லை. அவரையும் அழைத்து வருமாறும் மீள் விசாரணையா அல்லது விடுதலையா என்பதனை அன்றைய தினம் தெரிவிப்பதாக கூறி வழக்கு ஜுலை மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஒ.5,105)

# ஞானசாரருக்கு எதிரான வழக்கு செப். 16 இல்

கொழும்பு, மே 14

பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, விசாரணைத் திகதி குறிக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையான குருஹகந்த ரஜாமகாவிகாரையின் விகாராதிபதி உயிரிழந்தபோது, நீதிமன்ற உத்தரவை மீறி ஆலய சூழலில் தகனம் செய்த விவகாரத்தில் அவர் மீது தொடரப்பட்ட, நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலேயே திகதி குறிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா சார்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. ஞானசாரதேரர் மற்றும் முல்லைத்தீவு பகுதிக்கு பொறுப்பாக செயற்பட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மீது இந்த வழக்கு தொடரப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# ஆசன எண்ணிக்கைக்கு ஏற்றவாறு பயணிக்க இன்றுமுதல் அனுமதி!

## போக்குவரத்து அமைச்சர் தகவல்

கொழும்பு, மே 14

**ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களைத் தவிர ஏனைய 23 மாவட்டங்களிலும், அரச - தனியார் பஸ்களிலும், ரயில்களிலும் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணித்த இன்று முதல் அனுமதிக்கப்படும் என்று போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**



இது தொடர்பாக போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர நேற்றுமுன்தினம் மேலும் தெரிவித்ததாவது:

அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்படும். அதன் காரணமாக அநாவசியமான பயணங்களைத் பொது மக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும். ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டதன் பின்னர், அரச, தனியார் ஊழியர்கள் கடமைகளுக்குத் திரும்பத் தயாராகிறார்கள். இவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை சீராக்குவது பற்றி ஆராயப்பட்டுள்ளது. இங்கு எட்டப்பட்ட தீர்மானங்களின் பிரகாரம் கடமைக்குத் திரும்பும் ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கி போக்குவரத்துச் சேவைகளை நடத்த முடியும். பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவைகளில் அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் சேவைகள் மட்டுப்படுத்தப்படும் - என்றார். (ம)



சுகாதார நடைமுறைகளுடன்

# வவுனியாவில் திறக்கப்பட்டன சிகையலங்கார நிலையங்கள்

வவுனியா, மே 14

கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியாவில் பூட்டப்பட்டிருந்த சிகையலங்கார நிலையங்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நேற்று திறக்கப்பட்டன.

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் சிகையலங்கார நிலையங்களின் உரிமையாளர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் சில விதிமுறைகள் விதிக்கப்பட்டு நிலையங்களை திறக்க அனுமதி வழங்கப்பட்டது.

சிகையலங்கரிப்பு நிலையத்தை நடத்துவதற்கான சான்றிதழ் சுகாதார மருத்துவ அதிகாரியிடம் பெறப்பட்டு காட்சிப்படுத்த வேண்டும், முடிவெட்டுதல், முடிக்கு நிறப்பூச்சு பூசுதல் மட்டுமே செய்யப்பட வேண்டும், பணியாளர்களும் வாடிக்கையாளர்களும் சவர்க்காரமிட்டு கை கழுவுவதற்கான ஏற்பாட்டினை நிலையத்துக்கு உள்ளேயும், வெளியேயும் செய்தல் வேண்டும், பணியாளர்கள் கட்டாயமாக முகக்கவசம் மற்றும் பாதுகாப்பு கண்ணாடி அணிந்திருக்க வேண்டும், காலினால் செயற்படுத்தப்படும் கழிவகற்றல் கூடை இருக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

இதனை பின்பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகளின் சிபாரிசைப் பெற்று வவுனியாவில் பெரும்பாலான சிகையலங்கார நிலையங்கள் நேற்று திறக்கப்பட்டன. (ஐ-18)

# கொழும்பில் நேற்று விசேட சோதனை

கொழும்பு, மே 14

கொரோனா வைரஸ் தொடர்பான விசேட சோதனை நடவடிக்கையொன்று நேற்று கொழும்பில் மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் சுகாதார அறிவுறுத்தல்களுக்கு அமையச் செயற்படுகிறார்களா என்பதை அவதானிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் ஆலோசனைக்கு அமைவாக குறித்த சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக சுமார் 20 நடமாடும் பொலிஸ் வாகனங்களும், 100 சிற்றூர்திகளும் பயன்படுத்தப்பட்டதுடன், 300 பொலிஸ் அதிகாரிகளும் கடமையில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து மேலதிகமாக இந்த நடவடிக்கையை நாடு முழுவதும் விஸ்தரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ப)

# மழையால் 'கிளினிக்' இன்றி வீடு திரும்பிய கர்ப்பிணிகள்

சாவகச்சேரி, மே 14

கர்ப்பவதிகளுக்கான கிளினிக் நடத்தும் மண்டபத்தின் கூரை பழுதடைந்ததால், கர்ப்பவதிகள் மழை ஒழுக்கின் காரணமாக ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய சம்பவம் சாவகச்சேரியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் மாதத்தில் ஒருநாள் கர்ப்பவதிகளுக்கான கிளினிக் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் நடத்தப்படுகின்றது. நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கிளினிக்குக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும், கர்ப்பவதிகளும் வருகை தந்திருந்தனர். முற்பகல் 9.30 மணியளவில் திடீரென மழை பெய்ததால் மண்டபத்தினுள் நிற்கமுடியாத அளவுக்கு ஒழுகிக் கொண்டு இருந்தது. இதனால் கிளினிக் நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. கிளினிக் நடைபெறாமல் கர்ப்பவதிகள் வீடுகளுக்குத் திரும்பினர். சேதமடைந்து காணப்படும் கூரையினைத் திருத்தம் செய்து தருமாறு அதிகாரிகளினாலும் கர்ப்பவதிகளாலும் பல தட வைகள் நிலைய நிர்வாகத்தினருக்கு அறிவித்த போதிலும் இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஐ-9)

# காணிப் பிணக்கு மன்னாரில் அதிகரிப்பு

மன்னார், மே 14

மன்னார் மடுப்பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பல கிராமங்களில் போமிட் காணிகளை விற்பனை செய்வது மற்றும் இடம்பெயர்ந்து சென்றவர்களின் காணிகளையும் சேர்த்து வேலி அடைப்பது போன்ற பிரச்சினைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இது தொடர்பில் அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக மடுப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை பொலிஸாரின் நடமாட்டங்கள் காரணமாக சில காலங்களுக்கு முன் மடுப்பகுதியில் அதிகரித்து காணப்பட்ட காட்டு விலங்குகள் வேட்டையாடுதல் மற்றும் மரக் கடத்தல் போன்ற குற்றச் செயல்கள் குறைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-213)

மருத்துவமனை சென்ற

# கர்ப்பிணிப் பெண்ணை நடக்க வைத்த பொலிஸ்



யாழ்ப்பாணம், மே 14

முச்சக்கரவண்டி ஒன்றில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்ற கர்ப்பிணிப் பெண் ஒருவரையும், முதியவரையும், முச்சக்கரவண்டியிலிருந்து இறக்கி நடக்க வைத்துள்ளனர் பொலிஸார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

கர்ப்பிணிப் பெண்ணும், அவரது உறவினரான முதியவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காகச் சென்றுள்ளனர். அவர்கள் மணிக்கூட்டு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள சோதனைச்சாவடியில் பொலிஸாரால் மறிக்கப்பட்டு, அங்கிருந்து நடந்தே செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். குறித்த "வீதி மறியல்" கொரோனா அசாதாரண நிலை காரணமாக தற்காலிகமாக அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, உள்ள வீதியில் இந்த வீதி மறியல் அமைக்கப்பட்டு அந்த வீதி ஊடாக வாகனங்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. (ஐ-7)

இலங்கையில் இடம்பெற்ற

# 2018 வன்முறைகளுக்கு வருந்துகிறது பேஸ்புக்!

கொழும்பு, மே 14

2018ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் தான் வகித்த பங்குக்காக மன்னிப்புக்கோருவதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் வெறுப்புணர்வுப் பேச்சுகள் மற்றும் வதந்திகள் பரவியமை விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டதாகத் தெரியவந்துள்ளதையடுத்தே இதற்காக மன்னிப்புக்கோருவதாக பேஸ்புக் தெரிவித்துள்ளது.

இவ்வன்முறைகள் நடந்து 2 வருடங்கள் கடந்த நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை பேஸ்புக் நிறுவனம் இவ்வாறு மன்னிப்பு கோரியுள்ளது. மேற்படி வன்முறைகளின்போது, முஸ்லிம்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்கள், மிரட்டல்கள் சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில், இலங்கை அரசு அவரசநிலையை அறிவித்ததுடன் பேஸ்புக் பாவனைக்குத் தடை விதித்திருந்தது. மேற்படி வன்முறைகளில் பேஸ்புக் வகித்திருக்கக்கூடிய பாத்திரம் குறித்து பேஸ்புக் நிறுவனம் விசாரணை நடத்தியது. இவ்விசாரணைகளை நடத்தியவர்கள், பேஸ்புக்கில் வெளி யிடப்பட்ட சில விடயங்கள், முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு வழிவகுத்திருக்கலாம் எனத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பேஸ்புக் வெளியிட்ட அறிக்கையில், 'எமது பேச்சுமேடை (பேஸ்புக்) துஷ்பிரயோகம் செய்யப்பட்டமைக்காக நாம் வருந்துகிறோம். இதன் விளைவாக ஏற்பட்ட உண்மையான மனித உரிமைத் தாக்கங்களை நாம் ஏற்றுக்கொள்வதுடன், இதற்காக வருந்துகிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குடி 'கொரோனாவையும்' கெடுக்குமா?

கொரோனாவின் பரவுகையால் உலக நாடுகளின் கஜானாக்கள் எல்லாம் காலியாகிக் கொண்டிருக்கின்றன. ஆனானப்பட்ட அமெரிக்கப் பொருளாதாரம் கூட அடிவாங்கி, முடமாகும் நிலைக்குச் சென்று கொண்டிருக்கையில், இலங்கை மட்டும் தாக்குப்பிடிக்க முடியுமா என்ன? அதனாலேயே இலங்கைப் பொருளாதாரம் இன்னும் அதாலபாதாளத்துக்குச் செல்லும் முன்னர் தேர்தலை நடத்தி முடித்துவிடவேண்டுமென்று அரசு தீவிரமாக இருக்கின்றது. ஏனெனில் இன்னும் பொருளாதாரச் சரிவு ஏற்படுமானால் மிக விரைவிலேயே அதனை ஈடுசெய்ய வரிகளையும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளையும் இப்போதுள்ளதைவிடவும் மடங்குக்கணக்கில் அதிகரிக்கவேண்டியேற்படும். அப்போது மக்களின் கோபம் ஆட்சியில் உள்ளவர்கள் மீதே திரும்பும். அதனால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறும் கனவு கலைவதோடு, தோல்வியைக் கூடச் சந்திக்கும் நிலை ஆளும் தரப்புக்கு வரக்கூடும். எனவே அதற்கு முன்னதாகத் தேர்தலை வைத்துவிட்டு, அதன் பின்னர் வரிகளையும், விலைகளையும் கூட்டலாம் என அரசு எண்ணுகின்றது. ஆனாலும் அதுவரை தாக்குப்பிடிக்க வேண்டுமே. ஈடாடிக்கொண்டிருக்கும் பொருளாதாரத்தை இழுத்துப் பிடிப்பதற்கு அரசுக்குள்ள ஒரேவழி எந்தெந்த வழிகளில் வருமானம் கொட்டுமோ அந்த வழிகளையெல்லாம் திறந்துவிடுவதுதான்.

அப்படித்தான் நேற்று ஒரு பெரும் வருமான வழி இலங்கையில் திறக்கப்பட்டுள்ளது. கொழும்பு, கம்பகா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள சகல மதுபான சாலைகளும் நேற்றுமுதல் திறப்பதற்கு அரசு பச்சைக்கொடி காட்டியதும் தான் தாமதம், மதுபானங்களை வாங்கவென பெரும் வரிசையில் 'குடிமக்கள்' கூடிவிட்டனர். சாதாரணமாக அத்தியாவசியப் பொருள்களை வாங்கப் போனாலே , " ஐடெண்டி கார்ட் நம்பர் முறையில் வந்தாயா? முகக்கவசம் அணிந்தாயா? தனியாள் இடைவெளியைப் பேணினாயா அன்றேல் கும்பலாகக் கூடி கொரோனா பரப்ப நினைத்தாயா? யாரைக் கேட்டு வந்தாய்? எதற்கு இந்த நடமாட்டம்? ....." என்று வீரபாண்டியக் கட்டப்பொம்மன் தனத்திலான கேள்விகளால் துளைக்கும் பொலிஸார், நேற்று எந்தவித சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றாமல் அடித்துப் பிடித்து மதுபானத்தை வாங்கும் கும்பலை வேடிக்கை பார்க்க மட்டுமே செய்தனர். எப்படிக் கேள்வி கேட்கவோ, சட்ட நடவடிக்கை எடுக்கவோ முடியும்? ஏனெனில் குடிமக்களின் அதீதமான நுகர்வில் தானே இலங்கையின் கஜானாவைக் கொஞ்சமேனும் நிரப்ப முடியும்.

இதேவேளை, செம்மணிப் பகுதியில் போரால் உயிரிழந்தோருக்கு ஒரு கட்சியினர் அஞ்சலி செய்யச் சென்றனர். அதை எப்படியோ மோப்பம் பிடித்து பிரசன்னமான பொலிஸார், அஞ்சலி செலுத்த விடாமல் தடுப்பதற்கு ஆயிரம் காரணங்களை அடுக்கினர். குறிப்பாக கூட்டமாக அஞ்சலி செலுத்துவதால் கொரோனா பரவ ஏதுவாகும் என்பதே பிரதான வாதம். ஆயினும் அதற்கு அஞ்சலிக்க வந்தவர்கள் அசைந்து கொடுக்காததால், " எங்கள் உத்தரவினையும் மீறி அஞ்சலித்தால், இங்கு வந்தவர்கள் அத்தனைபேரையும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தவேண்டிய நிலை ஏற்படும்" என எச்சரித்துள்ளனர்.(கொரோனாவைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்ட தனிமைப்படுத்தலை , இப்போது பழிவாங்கவும் பயன்படுத்தலாம் என்பதை பொலிஸார் சொல்லாமல் சொல்லியுள்ளனர்) இப்படி அஞ்சலி செலுத்தவந்த சிலரை,கொரோனா பரவிவிடுமெனத் தடுத்து நிறுத்த முற்பட்ட பொலிஸார் மதுபானசாலையில் திரண்டவர்களைத் தடுக்கத் திராணியற்றுப் போய்விட்டார்கள்.

இதேபோல ஆலயங்களில் திருவிழாக்களைச் செய்யக் கூடாது, ஏனெனில் அப்படிச் செய்தால் மக்கள் திரண்டு வருவதால் கொரோனா பரவும் நிலை மீண்டும் தோன்றிவிடும் என்று அரசு எச்சரிக்கிறது. அப்படியானால், கோயிலில் திரளும் கூட்டத்தால் மட்டும்தான் கொரோனா பரவுமா? குடிப்பதற்காகக் கூடிக் கும்மியடிப்போரைக் கண்டால் கொரோனா கூட ஓடிவிடுமா?

யார் கண்டது, இரவிலும், வார இறுதி நாள்களிலும் தான் கொரோனா பரவுமென்று 'கண்டுபிடித்து' அந்த நேரங்களில் மட்டும் ஊரடங்கு போட்ட ஆச்சரியங்கள் நிகழும் நாட்டில் ,மது வாசனையைக் கண்டு கொரோனா ஓடுமென்று அரசு அறிவித்தாலும் அதிசயமில்லைத்தான்.

# வாரத்தில் 7 நாள்களும் பாடசாலைகள் இயங்கும்!

### கல்வியமைச்சு ஆலோசனை

**கொழும்பு, மே 14**

**பாடத்திட்டங்களை விரைவாக முடிப்பதற்காக வாரத்தின் ஏழு நாள்களும் பாடசாலைகளைத் திறப்பது தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்தி வருகின்றது என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாடசாலைகள் நீண்ட நாள்கள் மூடப்பட்டமையால், பாடத்திட்டங்களை விரைவாக முடிக்க வேண்டும் என்பதனால் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது.

இது நடைமுறைக்கு வந்தால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 7 நாள்களும் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறைந்தது 4 நாள்களுக்கு மட்டும் பாடசாலைகளுக்குச் சென்றால் போதும்.

மார்ச் 20 முதல் விதிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு காரணமாக மொத்தம் 276 பாடசாலை நேரங்கள் இழக்கப்பட்டுள்ளன. மேலும் முடிவடையாத பாடத்திட்டங்களை எவ்வாறு முடிப்பது என்பது குறித்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளோம்.

கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு இந்த வாரம் மாகாண கல்வி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாடசாலைகளை மீண்டும் திறப்பது குறித்த அவர்களின் யோசனைகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளனர் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (க)



# சுமந்திரனுக்கு செருப்புமாலை

### அகற்றியது பொலிஸ்

யாழ்ப்பாணம், மே 14

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருத்துத் தெரிவித்த தமிழ்;த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் உருவப் பொம்மைக்கு செருப்புமாலை அணிவிக்கப்பட்டு, 'நான் ஒரு தமிழ் இனத் துரோகி' என்ற வாசகமும் அடங்கிய பதாகை வைக்கப்பட்டிருந்தது.

நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை அண்மித்து இது வைக்கப்பட்டிருந்தது. நேற்றுக் காலை அங்கு வந்த பொலிஸார் அதனை அகற்றினர். (ஒ,த,20,106)

# 'சுடர் ஒளி' பெயரில் போலிச் செய்திகள்!

யாழ்ப்பாணம், மே 14

'சுடர் ஒளி' பத்திகையின் பெயரைப் பயன்படுத்தி முஸ்லிம் மக்கள் மத்தியில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிரான இன உணர்வுகளை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் செயற்பட்டில் சில விசமிகள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

'சுடர் ஒளி' பத்திரிகையில் வெளியான செய்திகளைப் போன்று போலிச் செய்திகளை வடிவமைத்து அவற்றை சமூக வலைத் தளங்களில் பதிவேற்றும் செயற்பாட்டில் விசமிகள் ஈடுபட்டுள்ளனர்.

'சுடர் ஒளி' பத்திரிகை மாலைப் பதிப்பு பத்திரிகையாக வெளிவந்தது. தற்போதுள்ள நிலைமை காரணமாக மின்னிதழாக வெளிவருகின்றது. 'சுடர் ஒளி' பத்திரிகையின் வைபர் மட்டும் வட்ஸ்அப் குழுக்களில் மாத்திரமே மின்னிதழ் வெளியிடப்படுகின்றது. (ஒ,5)



# கொழும்பு, ஹம்பகாவில் ஊரடங்கு தளர்த்தப்படும்

### விரைவில் நடவடிக்கை என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

கொழும்பு, மே 14

கொழும்பு மற்றும் ஹம்பகா மாவட்டங்களில் விரைவில் ஊரடங்கு தளர்த்தப்படும் என்று தெரிவித்துள்ளார் சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: கொழும்பு, ஹம்பகா மாவட்டங்களில் விரைவில் ஊரடங்கு தளர்த்தப்படும். இறுக்கமான கட்டுப்பாடுகளுடனும் நிபந்தனைகளுடனும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். விமான நிலையங்களை மீண்டும் திறப்பதில் சிக்கல் உள்ளது. விமான நிலையங்களால் மீண்டும் வைரஸ் காவப்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன - என்றார். (ம)




## நீதிமன்றில் தீ விபத்து

கொழும்பு,மே 14
மாத்தறை, தெய்யந்தர நீதிமன்ற கட்டடத்தின் சேமிப்பு அறையொன்றில் நேற்றுப் புதன்கிழமை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. விபத்தில் பல ஆவணங்கள் தீக்கிரையாகியுள்ளன.
பாதுகாப்பு நோக்கங்களுக்காக பொலிஸார் அந்தப் பகுதிக்கு விரைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### மழையுடன் பரவியது டெங்கு

# 11 மாவட்டங்களுக்கு சிவப்பு அறிவித்தல்



**கொழும்பு, மே 14**

**மழையுடனான காலநிலை தொடங்கியவுடன் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையும் படிப்படியாக அதிகரித்து வருவதால் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு 11 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.**

ஏப்ரல் மாதத்தில் மட்டும் நாடு முழுவதும் பதிவான மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 413 ஆக உள்ளது என்றும் மே மாதத்தின் முதல் வாரத்தில் 96 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஜனவரி 1 முதல் மே 8 வரையிலான காலப்பகுதியில் கொழும்பு (2,722 பேர்) , கம்பஹா (1,612), மட்டக்களப்பு (2,069), திருகோணமலை (2,152), கண்டி (1,117), யாழ்ப்பாணம் (1,755) ), களுத்துறை (971), காலி (953), கல்முனை (829), குருநாகல் (648), இரத்தினபுரியில் (593) நோயாளிகள் பதிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
நீண்ட காலத்துக்கு ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டிருப்பதுடன் மழையுடனான வானிலையும் ஆரம்பமாகியுள்ள நிலையில், எதிர்வரும் காலங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயமுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
இதற்கிடையில், நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகம், நகராட்சி மன்றம் மற்றும் நகர சபை ஆகியவற்றுடன் இணைந்து, ஜுன் மாதத்தில் டெங்கு ஒழிப்பு திட்டம் ஆரம்பிக்கப்படும் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

## மின்மானி வாசிப்பாளர் மீது பெல்மடுல்லயில் தாக்குதல்!

*கட்டணத் தொகை அதிகமாக இருந்ததாம்*

கொழும்பு, மே 14
மின்சாரக் கட்டணத் தொகை அதிகமாக இருப்பதாகக் கூறி, மின்மானி வாசிப்பாளர் ஒருவர் வீட்டு உரிமையாளரால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் பெல்மடுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.
இச்சம்பவத்தில் காயமடைந்த மின்மானி வாசிப்பாளர் கஹாவத்தை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
மின்மானி வாசிப்பாளர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் மஹிந்த அமரவீர கண்டனம் தெரிவித்துள்ளார். அரச ஊழியர்கள் கடமையை மேற்கொள்ளும்போது தாக்கப்படுவதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள அமைச்சர் மஹிந்த அமரவீர, தாக்குதல் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கை மேள்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிம் கோரியுள்ளார். (ம)

## தேர்தலை நடத்தாமல் காத்திருக்க முடியாது

*திஸ்ஸ விதாரண தெரிவிப்பு*

கொரோனா வைரஸ் இன்னும் இரண்டு ஆண்டுகள் கூட நீடிக்கலாம். அதுவரை தேர்தலை நடத்தாமல் காத்திருக்க முடியாது என லங்கா சம்சமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.
தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
கடந்த காலத்தில் அப்போதைய அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் இருந்த அரசாங்கத்தை மாற்று வதற்கான ஆணையாகவே கடந்த உள்ளூராட்சி தேர்தலிலும், ஜனாதிபதி தேர்தலிலும் மக்கள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர். எனவே தற்போது பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதுமட்டும் அல்ல இவ்வாறான வைரஸ் தொற்றுப்பரவல் நெருக்கடியில் கூட தென்கொரியாவில் தேர்தல் இடம்பெற்றுள்ளது. இது அனைவருக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## சுவிஸ் வர்த்தகக் குழுவால் 4.5 மில்லியன் நன்கொடை

இலங்கையை மையமாகக் கொண்ட சுவிஸ் இலங்கை வர்த்தகக் குழு மற்றும் இலங்கையினது சுவிஸ் வர்த்தக வலயம் என்பன இணைந்து 4.5 மில்லியன் இலங்கை ரூபாவை அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணியினது கொவிட்19 கட்டுப்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டமைப்புக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.
இது தொடர்பில் இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கொவிட்19 உலகலாவிய தொற்றுநோய் என்பது தனித்துவமான உலகலாவிய சுகாதார நெருக்கடியாவதுடன், இதற்கு தேசிய எல்லைகளைக் கடந்த பதில் நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.
உலகம் முழுவதும் அரச நிறுவனங்கள், தனியார் துறைகள், சுகாதார சேவைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து கொவிட்19 க்கு எதிரான போராட்டத்தில், அவர்களது வளங்களை ஒன்று திரட்டியுள்ளனர். இலங்கையின் நிலைமையும் இதுவாகும்.
இந்த நிலையிலேயே இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதரகம் இலங்கையை மையமாகக் கொண்ட சுவிஸ் இலங்கை வர்த்தகக் குழு, இலங்கையினது சுவிஸ் வர்த்தக வலயத்துடன் பங்குதாரராக இணைந்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிவித்திருக்கிறது.
இரு நிறுவனங்களும் ஒன்றிணைந்ததாக 4.5 மில்லியன் இலங்கை ரூபாவை தேசிய ரீதியிலும், மாவட்ட மட்டத்திலும் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களான அத்தியாவசிய சேவைகளுக்கான ஜனாதிபதி செயலணியினது கொவிட்19 கட்டுப்பாட்டுக்கான சிவில் சமூகக் கூட்டமைப்புக்கு நன்கொடையாக வழங்குகின்றது.
இந்த நிதியுதவியானது சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களுக்கும் உதவும். இத் தொகையில் தூதரக ஊழியர்களால் வழங்கப்பட்ட பங்களிப்பும் உள்ளடங்குவதுடன், இது இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுடனான எமது உண்மையான ஒத்துழைப்புக்குமான அடையாளமாகும். என்றுள்ளது. (க)

## இலாபத்தை மட்டும் நோக்காது சுகாதாரத்தைக் கவனியுங்கள்

*சுகாதார மருத்துவ அதிகாரி அறிவுறுத்து*

அம்பாறை, மே 14
கொரோனா அச்சுறுத்தல் நிலவுகின்ற இந்தக் காலகட்டத்தில் நோன்புப் பெருநாளுக்கு உடு, துணிகள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் புடவைக்கடை வியாபாரிகள் வியாபார, இலாப நோக்கை முதன்மைப்படுத்தாது சுகாதார ஆலோசனைகளை தவறாது பின்பற்றுங்கள். இதற்கு வருகை தருவோரையும் முறைப்படி வழிநடத்த வேண்டும் என்று நிந்தவூர் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் தஸ்லீமா பஷீர் கண்டிப்பான அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.
நிந்தவூரில் புடவை வியாபாரம் செய்யும் புடவைக் கடை உரிமையாளர்களுக்கு நேற்று நடத்திய கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளைத் தவறாது பொதுமக்கள் கடைப்பிடிப்பதன் மூலமே தொற்று பரவலிலிருந்து பாதுகாப்புப் பெறலாம்.
வைரஸ் தொற்று தொடர்பில் அறிகுறிகள், அடையாளங்கள் தெரியாதவர்களால்கூட, தொற்று பரவும் அபாயமுள்ளதை உணர்ந்து பொதுமக்கள் செயற்பட வேண்டும். என்னை நான் பாதுகாக்க வேண்டும், மற்றவரையும் பாதுகாக்க வேண்டுமென்ற சிந்தனையுடன் அரச சட்டங்களை, ஆலோசனைகளை மதித்து நாம் செயற்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (த-30)

# பெய்துவரும் மழையை அடுத்து டெங்கு நுளம்பு பெருகும் சூழல்!

*அவதானமாக இருக்குமாறு சுகாதாரப் பகுதி அறிவுறுத்தல்*

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த மூன்று தினங்களாகப் பெய்துவரும் மழையை அடுத்து டெங்கு நுளம்பு பரவக் கூடிய அபாயம் காணப்படுகிறது.
எனவே பொதுமக்கள் எச்சரிக்கையுடன் தமது குடியிருப்பு மற்றும் காணிகளைத் துப்பரவாக வைத்திருக்குமாறு சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் ஒலிபெருக்கி மூலம் அனைத்துப் பிரிவுகளிலும் அறிவித்து வருகின்றனர்.
வருட ஆரம்பத்தில் மிக அதிகரித்த நிலையில் காணப்பட்ட டெங்கின் தாக்கம் பொதுமக்கள் வழங்கிய ஒத்துழைப்பினால் விரைவில் கட்டுப்படுத்த முடிந்தது.
டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு மனிதனுக்கு அருகில் மனிதனால் உருவாக்கப்படும் நீர் தேங்கும் இடங்களிலேயே பெருகுகிறது.
பிளாஸ்ரிக். பீங்கான் , தகரம் என்பவற்றினால் ஆக்கப்பட்ட பாத்திரங்கள் கூரைப் பீலிகள், நீர்த்தேங்கிகள் சிரட்டைகள் ,இளநீர் கோம்பைகள், பூச்சாடிகள் மரப்பொந்துக்கள, ரயர்கள் ,பறவைகளுக்கான நீர்த்தாங்கிகள், குளிர்சாதனப் பெட்டிகளின் நீரேந்தும் தட்டுகள், பாவிக்காத மலசல கூடங்கள் போன்றவற்றில் இவ்வகை. நுளம்புகள் முட்டையிட்டுநீர்தேங்கும்போதுகுடம்பிகளாகமாறிப்பெருகின்றன.
நுளம்பு பெருகாமல் இருப்பதற்கு கழிவுகளை அவற்றின் தன்மைக்கேற்ப வழக்கப்படுத்தி அகற்றுதல் வேண்டும் உக்கக்கூடிய கழிவுகளை வீட்டு வளவினுள்ளேயே புதைப்பதற்கு அல்லது எரிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.
உக்காத மீள்சுழற்சி செய்யக்கூடிய போத்தல்கள், கண்ணாடிப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் , உலோகத்தாலான கழிவுப் பொருள்கள் போன்றவற்றை உரப்பையில் இட்டு இறுக்கமாக வாய்ப்பகுதியைக் கட்டிய பின்னர் பிரதான வீதியோரம் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படாதவகையில் வைத்து பிரதேச சபையின் வாகனம் வரும் போது ஒப்படைக்கவுமென சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ஐ-9)

# பொதுத் தேர்தலை ஒத்திவையுங்கள்!

## ஆணைக்குழுவிடம் ஐ.தே.க. வலியுறுத்து

**கொழும்பு, மே 14**

**நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.**

எப்போதுதான் தேர்தலை நடத்துவது என்பது பற்றித் தீர்மானம் எடுக்க, மஹிந்த தேசப்பிரிய தலைமையிலான தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளின் செயலர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது. எனினும், அதில் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை மிக உயர்வாக இருக்கின்றபோதிலும் வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று அரசு அறிவித்தமை குறித்தும் அவர் விசனம் வெளியிட்டார்.

இத்தகையதொரு நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு தனது முழுமையான அதிகாரங்களைப் பயன்படுத்துவதுடன் சுகாதாரப் பிரிவினருடன் கலந்தாலோசித்து நாட்டு மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கேட்டுக்கொண்டார். (த-22)

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இரண்டு சிறார்கள் சாட்சியம்

கொழும்பு, மே 14

உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இடம்பெறும் விசாரணைகளில் இரண்டு சிறுவர்கள் சாட்சிகளாக கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முற்படுத்தப்பட்டனர். நீதிவானின் உத்தியோகபூர்வ அறையில் வைத்து அவர்களிடம் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டது.

விசாரணைகளில் வெளிப்படுத்தப்பட்ட, புத்தளம் வனாத்தவில்லு, காரைத் தீவுப் பகுதியின் மத்ரஸாவில் அடிப்படைவாதம் போதிக்கப்பட்டு, ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை மையப்படுத்தியே குறித்த சாட்சியாளர்களான இரு சிறுவர்களும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட னர் என்று பொலிஸ் தலைமையகத் தகவல்கள் தெரிவித்தன.

சுமார் ஒரு மணி நேரத்துக்கும் அதிக நேரம் அவர்கள் நீதிவான் முன்னிலையில் சாட்சியமளித்துள்ளனர்.

தற்போது, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளை 12 குழுக்கள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நுவன் வெதிசிங்கவின் கீழ் முன்னெடுத்து வருகின்றன என்று பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன பொலிஸ் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். (த)



### சிகை அலங்கரிப்பு நிலைய சுகாதார வசதிகள் சரிதானா?

*பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் கண்காணிப்பு*

தென்மராட்சி, மே 14

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இயங்கும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் கொரோனா கட்டுப்பாட்டு முற்பாதுகாப்பு நடைமுறைகளுடன் மீளத் திறப்பதற்கான தகுதியில் உள்ளனவா என்பது பற்றி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை குழுப் பரிசோதனை மேற்கொண்டனர்.

இந்தப் பரிசோதனைகளில் வாடிக்கையாளரும் பணியாளரும் கைகளைக்கழுவும் வசதி, முடிவெட்டப் பயன்படுத்தும் உபகரணங்கள் உடனுக்குடன் கிருமி நீக்கும் வசதி, ஒவ்வொருவருக்கும் சேவை வழங்கியபின் கதிரை மேசை மற்றும் தொடுகை, மேற்பரப்புகளை சுத்தமாக்கும் வசதி, முகக்கவசம் அணிதல் மற்றும் பௌதீக இடைவெளியை நபர்களிடையே பேணுதல் உட்பட பதினெட்டு வகையான சுகாதார மேம்பாட்டு விடயங்கள் பரிசோதிக்கப்பட்டன. இனங்காணப்பட்ட குறைபாடுகள் யாவும் நிவர்த்தி செய்யப்பட்டபின்னர் அந்த நிறுவனங்கள் செயற்படுவதற்கான சான்றிதழ்களை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர் வழங்குவர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்

சாவகச்சேரி,மே 14

ஊரடங்குச் சட்டம் தற்போது தளர்த்தப்பட்ட நிலையில், உறவினர்களைப் பார்வையிட என வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள், தென்மராட்சிப் பிரதேசத்துக்கு வந்த வண்ணம் உள்ளனர் என அறியமுடிகிறது.

எனவே வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தருபவர்கள் அல்லது தங்க வரும் உறவினர்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக தொலைபேசி இலக்கத்துடன் (0212 270014) தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றின் தாக்கம் இன்னமும் குறைவடையாத நிலையில், வெளி மாவட்டங்களிலிருந்து வருகை தருவோர் பணியகத்துடன் தொடர்பு கொண்டு நோய்ப் பரவலைத்தடுக்க ஒத்துழைக்குமாறும் அவர்கள் அறிவித்துள்ளனர். (க-9)

### தாக்குதலைத் தடுக்கத் தவறியமை: செப்ரெம்பரில் தொடர் விசாரணை

*மைத்திரிபால சார்பில் சட்டத்தரணி முற்பட்டார்*

கொழும்பு, மே 14



தெளிவான உளவுத் தகவல் கிடைத்தும், உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதன் ஊடாக தமது அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணாண்டோ உள்ளிட்டோருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களிலும் பொறுப்புக் கூற வேண்டியவர்களாகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் முதன் முறையாக சட்டத்தரணி ஒருவர் நீதி மன்றில் முற்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா இதன்போது மைத்திரிபால சிறிசேன சார்பில் முற்பட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சார்பில் தாம் நீதிமன்றில் முற்படப்போவதில்லை என்று சட்ட மா அதிபர் அறிவித்திருந்த நிலையில், முதன் முறையாக இன்று மைத்திரிபால சிறிசேன சார்பில் சட்டத்தரணி ஒருவர் முற்பட்டார்.

இந்தநிலையில் இந்த 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் எதிர்வரும் செப்ரெம்பர் 2 ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுக்க உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்மானித்தது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோ, முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் விசேட பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியலால் தசநாயக்க உள்ளிட்டவர்களுக்கு எதிராக இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதம நீதியரசர் தலைமையிலான 7 பேர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் இதற்கு முன்னர் இந்த மனுக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது. புவனேக அளுவிஹாரே, எஸ். துரைராஜா மற்றும் காமினி அமரசேகர ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்போதே இந்த மனுக்கள் தொடர்பில் எதிர்வரும் செப்ரெம்பர் 2, 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் விசாரணைகளைத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு நீதியரசர்கள் குழாம் தீர்மானித்தது.

அதன்படி எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூல சமர்ப்பணங்களை அனைத்துத் தரப்பினரும் மன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதியரசர்கள் குழாம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அத்துடன் பொறுப்புக் கூறத்தக்க தரப்பான, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் அனைத்தையும் சட்டத்தரணியிடம் கையளிக்குமாறு மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது.

குண்டுத்தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்தும் அதனைத் தடுப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாத பாதுகாப்புப் பிரிவின் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு சட்ட மா அதிபருக்கு உத்தரவிடுமாறு கோரி, அருட்தந்தை சரத் இத்தமல்கொட உள்ளிட்ட மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஆகிய தரப்பினரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. (த)

வைத்திய கலாநிதி. கோ.றஜீவ்
(பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)

# கொரோனாவுடன் வாழப் பழகுவோம்




## பாடசாலை, கல்வி நிலையங்கள் ஆரம்பித்த பின் செல்லும் போது



### தவிர்க்க வேண்டியவை

- தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் பாடசாலை, கல்வி நிலையங்களுக்கு செல்வதனை தவிர்க்க வேண்டும்.
- நண்பர்களுடன் கைகுலுக்குதல் , கட்டித்தளுவுதல், பகிர்ந்து உண்ணுதல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
- பாடசாலை, கல்வி நிலையங்களிலுள்ள மேற்பரப்புக்களை அனாவசியமாக தொடுவதனைத் தவிர்க்க வேண்டும்.
- பாடசாலை, கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கும் மற்றும் முடியும் வேளையில் கூட்டமாக நிற்பதனைத் தவிர்க்க வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டியவை

- பாடசாலை, கல்வி நிலையங்கள் செல்லும் போது வாயிலில் 20 வினாடிகளுக்கா வது கைகளை சவர்க்காரமிட்டு கழுவியதன் பின் செல்ல வேண் டும்.
- முகக் கவசத்தை சரியான முறையில் அணியுங்கள்.
- எப்பொழுதும் எல்லோரிடமும் ஒரு மீட்டர் தூர இடைவெளியைப் பேணுங் கள்
- உணவு மற்றும் குடிநீரை வீட்டிலிருந்து எடுத்துச் செல்லுங்கள்.
- தனி நபர் சுகாதார பழக்க வழக்கங்களை தவறாது பின்பற்றுங்கள்.
- முடிந்தளவு நடந்து அல்லது சைக்கிள் அல்லது தனி வாகனங்களில் பாடசாலை, கல்வி நிலையங்களுக்கு சென்று வாருங்கள். (பொது போக்குவரத்து பாவிப்பின் 'பொது போக்குவரத்து பாவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டியவை' என குறிப்பிட்ட பகுதியில் உள்ளவற்றை பின்பற்றுங்கள்.)
- முடிந்தளவுக்கு அன்றைய தினம் தேவையான கொப்பி, புத்தகங்கள், எழுது கருவிகள் என்பவற்றை மாத்திரம் எடுத்துச் செல்லுங்கள்.
- மலசல கூடங்களை தூய்மையாகப் பயன்படுத்துங்கள்.

## வயோதிபர்கள், தொற்றா நோய்கள் உள்ளோர்

வயோதிபர்கள் தொற்றா நோய்கள் உள்ளோர் கொரோனா தொற்றுக்கு அதிகம் ஆபத்தை எதிர் நோக்கும் குழுவில் உள்ளடக்கப்படுவதால் அவதானமாக செயற்பட வேண்டும்.

### கடைப்பிடிக்க வேண்டியவை

- முடிந்தளவில் வீட்டிலிருக்க முயற்சி செய்யுங்கள்.
- எப்பொழுதும் மற்றவர்களிடமிருந்து; ஒரு மீட்டர் தூர இடைவெளியைப் பேணுங்கள்.
- வீட்டில் இருந்தவாறு உடற்பயிற்சிகளை செய்யுங்கள்
- ஆரோக்கியமான போசாக்கான உணவை எடுங்கள்.
- வீட்டுத் தோட்டம் செய்யுங்கள்.
- அடிக்கடி 20 வினாடிகளுக்காவது கைகளை சவர்க்காரமிட்டு கழுவுங்கள்.
- வீட்டிலிருக்கும் போது செய்யக் கூடிய சமய செயற்பாடுகள், பொழுது போக்குகள் அல்லது மீளாக்க செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
- முகக் கவசத்தை சரியான முறையில் அணியுங்கள்.
- வழமையான மருந்து மாத்திரைகளை தவறாது உள்ளெடுங்கள்.
- சுவாச அறிகுறிகள் ஏற்படின் ஆலோசனைகளுக்காக 1999 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- அவசர நிலைமையில் வைத்தியசாலைக்கு செல்ல 1990 அம்புலன் சேவைக்கு அழைக்கவும்.



### தவிர்க்க வேண்டியவை

- ஒன்று கூடல்கள், மத வழிபாட்டிடங்களுக்கு செல்வதனை தவிருங்கள்.
- அனாவசியமாக வீட்டை விட்டு வெளியேறுவதனை தவிருங்கள்.
- தற்போதய நிலைமையினை பொறுத்தவரை இன்னமும் எவ்வளவு காலம் இந்த ஆபத்து நிலை தொடரும் என்பது எவராலும் எதிர்வு கூறமுடியாதுள்ளது. எனவே நாம் கொரனா ஆபத்துடன் தான் வாழ்வோம் என நம்மை நாமே தயார் படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் இந்த கட்டுரையில் குறிப்பிட்டவாறு நடைமுறைகளை பின்பற்றி வருவார்களாயின் தாமும் தான்னை சுற்றியுள்ளவர்க ளையும் இந்த கொரோனா ஆபத்திலிருந்து பெருமளவு பாதிப்புக்களின்றி பாதுகாத்திட முடியும்.
- சுகாதார நடைமுறைகளை சரிவர பின்பற்றுவோம் கொரனாவுடன் வாழப் பழகுவோம்.

நன்றி.

மே 18 அன்று

# 18.18 இற்கு சுடரேற்றுங்கள்

யாழ்ப்பாணம், மே 14

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான மே 18ஆம் திகதி மாலை 6 மணி 18ஆவது நிமிடத்தில் ஒவ்வொரு வீட்டிலும் விளக்குகள் ஏற்றப்பட்டு போரின் போது உயிர்நீத்தவர்களுக்காக பிரார்த்தனை செய்யுமாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது இல்லத்தில் வைத்து ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கொரோனா காலத்தில் வருவதால் பலவிதமான தடங்கல்களை நாங்கள் எதிர்நோக்க இருக்கின்றோம். முள்ளிவாய்க்காலுக்கு சென்று எங்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கும் வண்ணம் விளக்குகளை ஏற்றி மௌனமாக இறந்தவர்களைப் பற்றி சிந்திக்கக் கூடிய ஒரு சூழல் தற்போது இருக்கின்றதோ என்று எங்களுக்கு கூற முடியாது இருக்கின்றது. அவ்வாறு செய்யக்கூடியவர்கள் அங்கு சென்று ஒரு விளக்கேற்றி மௌனமாக அஞ்சலி செலுத்தி வரக்கூடும் என்றால் மிகவும் நன்று.

பொலிஸார், பாதுகாப்புத் தரப்பினரின் எதிர்ப்புகள் இருப்பதை நான் காண்கின்றேன். நினைவேந்தல் செய்பவர்களை தனிமைப்படுத்தல் நிலையத்துக்குக் கொண்டுபோக எத்தனிக்கின்றார்கள். 14 நாள்கள் அவர்களை தனிமைப்படுத்தமுடியும்.

எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் இரண்டு விடயங்களை அன்றைய தினம் செய்ய இருக்கின்றோம். இறந்த மக்களினுடைய நினைவாக பயன்தரும் மரங்களை நடுவதற்கு இருக்கின்றோம்.

அது ஒரு முக்கியமான பெட்டகம் என்று நான் நினைக்கின்றேன். ஏன் என்றால் வெறுமனே எங்களுடைய மனோநிலையைப் பிரதிபலிக்கும் வண்ணம் விளக்குகளை ஏற்றுவதோடு நின்றுவிடாமல் வரும் காலத்திலே எங்களுடைய இறந்த உறவுகள் எதை நோக்கி எவ்வாறான நிலைக்கு தள்ளப்பட்டார்களோ அதாவது எங்களுடைய வடகிழக்கு தாயகப் பிரதேசம் நன்றாக முன்னேறவேண்டும், செழிக்க வேண்டும் அத்தோடு எல்லா விதத்திலும் நல்லதொரு நிலையை அடைய வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அது நடைபெற வேண்டுமானால் இப்போது இருந்தே இந்த பயன்தரு மரநடுகை நிகழ்வில் நாங்கள் ஈடுபடுவது நல்லது என்று நினைக்கின்றேன். அதைவிட உலகம் முழுவதும் எங்களுடைய தமிழ் உறவுகள் அன்றைய தினம் 18.18.18 க்கு அதாவது 18ஆம் திகதி மாலை 6 மணி 18 நிமிடத்திற்கு ஒவ்வொருவரும் தங்களுடைய வீட்டிலே இறந்தவர்களை நினைத்து விளக்குகள் ஏற்ற வேண்டும். விளக்குகளை ஏற்றி இறந்தவர்களை நினைத்து அவர்களுடைய எதிர்பார்ப்பின்படி வரும் காலம் நல்லதொரு காலமாக வடகிழக்கு மாகாண மக்களுக்கு அமைய வேண்டும் என்று சிந்திப்போம்- என்றார். (ஓ.5,111)

# 5,255 மெற்றிக்தொன் நெல் கையிருப்பில்!

## வவு. மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தகவல்

**வவுனியா, மே 14**

**வவுனியாவில் 2ஆயிரத்து 108 மெற்றிக்தொன் நெல் அரச நிறுவனங்களால் கொள்வனவு செய்து களஞ்சியசாலைகளில் உள்ள தோடு தனியார் அரிசி ஆலைகளில் 3 ஆயிரத்து 147 மெற்றிக்தொன் நெல் கையிருப்பில் உள்ளது என்று வவுனியா மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி ஈஸ்வரராஜன் தெரிவித்தார். ஜனாதிபதி செயலணியின் இலக்கை நோக்கி நகர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரம் ஹெக்ரெயர் சிறுபோகச் நெற்செய்கை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தாலும் குளங்களில் உள்ள நீரின் அளவுக்கும் காலநிலை அவதான நிலையத்தின் தகவலுக்கும் அமைவாக ஆயிரத்து 900 ஹெக்ரெயர் நெற்செய்கையே மேற்கொள்ள முடியும். இதுவரை ஆயிரத்து 795 ஹெக்ரெயர் நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. காலநிலை அறிவுறுத்தல் தொடர்பாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்தும் விதமான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளோம். விவசாயத்தில் தன்னிறைவடைந்த நாம் சிறுதானியங்களை இறக்குமதி செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த இறக்குமதிகளைத் தடைசெய்யும் விதமாக மாவட்டங்கள் தோறும் இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. எங்கு விவசாயம் மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது என்பதனை துல்லியமாக ஆராய்ந்து இந்த இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. இது சாதாரணமான இலக்கை விட அதிகமானதாகும். ஜனாதிபதி செயலணியின் மூலமாக எமது மாவட்டத்தில் பயிரிட வேண்டும் என தரப்பட்ட இலக்குகளில் 4 ஆம் திகதி வரை நாம் 507 ஹெக்ரெயர் வரையில் அடைவு மட்டத்தை அடைந்துள்ளோம்.

அத்துடன் சமூக பாதுகாப்புத் திணைக்களமும், தம்மால் பயிரிடக்கூடிய மரக்கறிச் செய்கையின் அளவை 47.7 ஹெக்ரெயராகத் தந்துள்ளனர். இதன் பிரகாரம் 899.7 ஹெக்ரெயர் பிரதேசத்தில் உற்பத்திகளை மேற்கொள்ள தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கடைகளிலும் இருக்க வேண்டிய பசளைகளின் அளவும் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி செயலணிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிறுதானிய பயிர்ச்செய்கையிலும் மாற்றுப்பயிர்ச்செய்கையிலும் மக்கள் அதிகமாக ஆர்வம் காட்டாமைக்கு முக்கிய காரணமாக காலநிலை மாற்றம் காணப்படுகின்றது.

இதேவேளை, வவுனியாவில் நெல் சந்தைப்படுத்தும் சபையால் ஆயிரத்து எண்ணூற்று ஐம்பது (1850) மெற்றிக்தொன் காயவைத்த நெல் கொள்வனவு செய்து களஞ்சியசாலைகளில் உள்ளன. அத்துடன், வவுனியா பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தால் ஈரமான நெல்லாக 218.64 மெற்றிக்தொன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மொத்தமான வவுனியா மாவட்டத்தில் அரச நிறுவனங்களில் 2ஆயிரத்து108.64 மெற்றிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலைகளில் உள்ளது. இதேவேளை தனியார் அரிசி ஆலைகளில் 3ஆயிரத்து 147 மெற்றிக்தொன் நெல் தற்போது கையிருப்பில் உள்ளது- என்றார். (ப-18)



## பொங்கி வழிந்தது ஆலயக் கிணறு!

மட்டக்களப்பு. மே 14

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் கிழக்குப் பக்கமாக அமைந்துள்ள கிணற்றின் நீர் மட்டம் மேலெழுந்து, பொங்கி வழிந்த சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று ஆலயத்தின் பிரதம குரு சிவ ஸ்ரீ மு.அங்குசசர்மா தெரிவித்தார்.

கிணற்றில் நீர் மட்டம் உயர்ந்து வழிந்தோடுவது தொடர்பாக ஆலயத்திற்குச் சென்ற ஆலயப் பிரதமகுரு சிவ ஸ்ரீ மு.அங்குசசர்மா ஆலய நிர்வாகத்தினரிடம் தொலைபேசியில் தெரிவித்துள்ளார்.

பின்னர் சம்பவம் அறிந்த அப்பகுதி மக்கள் ஆலயத்துக்கு விரைந்து கிணற்றைப் பார்வையிட்டனர். இந்தச் செய்தி பரவலடைந்து, அதைக் காண்பதற்கு மக்கள் அங்கு திரண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும் சம்பவ இடத்துக்கு விரைந்த களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் மக்களைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

பல ஆண்டுகளாக இந்த களுவாஞ்சிக்குடி புண்ணிய பூமியிலே எமது மாணிக்கப்பிள்ளையார் அருள்பாலித்துக் கொண்டு பல அற்புதங்கள நிகழ்ந்து வருகின்றார். அதுபோல் தற்போது எமது ஆலயத்தின் கிணற்றிலிருந்து நீர் வழிகின்ற அற்புதமானது இறைவனுடைய அருள்தான். இந்த அருள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என நான் மாணிக்கப்பிள்ளையாரிடம் வேண்டுகின்றேன் என்று ஆலயத்தின் பிரதம குரு சிவ ஸ்ரீ மு.அங்குசசர்மா தெரிவித்தார். (ப-150)



## 'வரோட்' அமைப்பால் வாழ்வாதார உதவி

வவுனியா,மே 14

வாழ்வாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள, தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு, வரோட் அமைப்பினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அனந்தர் புளியங்குளம், மதியாமடு, நைனாமடு, சின்ன அடம்பன், புளியங்குளம் வடக்கு தெற்கு, கனகராயன்குளம் வடக்கு தெற்கு, மன்னகுளம் மாரஇலுப்பை குளவி சுட்டான் ஒலுமடு மருதோடை கீரிசுட்டான் கற்குளம் பட்டிக்குடியிருப்பு நெடுங்கேணி வடக்கு தெற்கு ஆகிய 18 கிராம சேவை பிரிவுகளிலுள்ள 30 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. (க-222)

## இன்று மின்தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் இன்று வியாழக்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை புதுக்குடியிருப்பு நகரம், சிவநகர், மந்துவில், ஆனந்தபுரம், மல்லிகைத்தீவு,வலைஞர்மடம், புதுமாத்தளன் ஆகிய இடங்களிலும் **வவுனியா மாவட்டத்தில்** கோவிற்குளம் கிராமம், கிறிஸ்தவகுளம் ஆகிய இடங்களிலும் **மன்னார் மாவட்டத்தில்** வட்டுபித்தன்மடு,புதுக்காமம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

இதேவேளை நாளை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளத்திலிருந்து திருக்கேதீச்சரம் வரை,வங்காலை பிரதேசம், சீனத்துறைமுகம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

## இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பு

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு மேலும் ஒரு இரத்த சுத்திகரிப்பு இயந்திரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

IMHO நிறுவனத்தினர் யாழ்.போதனா மருத்துவமனை நோயாளர் நலன் புரிச் சங்கத்தின் ஊடாக, புதிய இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்கினர். அதனையடுத்து அங்கு சேவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-9)

## புதைக்கப்பட்ட சடலம் மீளத் தோண்டியெடுப்பு

புத்தளம், மே 14

கடந்த வாரம் நல்லடக்கம் செய்யப்பட்ட சடலமொன்று நீதிமன்றத்தின் உத்தரவில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தோண்டியெடுக்கப்பட்டது.

முந்தல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிவாசல்பாடு கிராமத்தில் வசித்து வந்த மோசஸ் அப்புஹாமி என்பவரது சடலமே தோண்டியெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மதுரங்குளி கரிக்கட்டைப் பகுதில் கடந்த மார்ச் மாதம் நடந்த வாகன விபத்தில் குறித்த நபர் படுகாயமடைந்துள்ளார். அவர் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

புத்தளம் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 28 நாள்கள் சிகிச்சை பெற்றுவந்த நபர், மே மாதம் 4 ஆம் திகதி கொழும்பு வைத்தியசாலையில் இருந்து மீண்டும் புத்தளம் தள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபருடைய சடலம் எவ்வித பரிசோதனையும் மேற்கொள்ளாமல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சடலம் 5 ஆம் திகதி மதுரங்குளி கந்ததொடுவாய் ரோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முந்தல் பொலிஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து, புத்தளம் மாவட்ட நீதிவான் லஹிரு என் சில்வா முன்னிலையில் சடலம் தோண்டியெடுக்கப்பட்டது. (க)



## தனிமைப்படுத்தப்பட்ட 129 பேர் நேற்று விடுவிப்பு

வவனியா,மே 14

வவுனியா, பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாமில் கொரோனா தொற்று பரிசோதனைக்காக தனிமைப்படுத்தப்பட்டிருந்த 129 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

வெலிசறை கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை வீரர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து அவர்களுடன் தொடர்புடைய பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த அவிசாவளை, நுவர, குருநாகல், நாவலம்பிட்டி, கொழும்பு, கண்டி ஆகிய பகுதிகளைச் சோந்த 129 பேர் இவ்வாறு விடுவிக்கப்பட்ட னர்.

இவர்கள் இராணுவப் பாதுகாப்புடன் 6 பஸ்களில் அழைத்து செல்லப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்குக் கொண்டு சென்று விடுவிக்கப்பட்டனர். (ஐ-18,110)

## இராணுவத்தால் தேடப்பட்ட நிலையில்
# பொலிஸில் சரணடைந்தவரை விளக்கமறியில் வைக்க பணிப்பு

யாழ்ப்பாணம், மே 14

இராணுவத்தினரால் தேடப்பட்டு வந்தார் என்று கூறப்படும் நபர் பொலிஸில் சரணடைந்த நிலையில், அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டது.

வடமராட்சி கிழக்கில் கடந்த ஜனவரியில் இராணுவத்தினருடன் சிலர் முரண்பட்டிருந்தனர். அதன்போது இராணுவத்தினரைத் தாக்கினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டில் சிலருடைய பெயர்களை இராணுவத்தினர் குறிப்பிட்டு பொலிஸாருக்கு முறையிட்டிருந்தனர். அதன்படி சிலர் கைது செய்யப்பட் வழக்குத் தொடர்கின்றது.

எனினும், ஜங்கரன் என்று கூறப்படும் நபர் பொலிஸ் முறைப்பாட்டில் குறிப்பிடப்படவில்லை என்று பொலிஸார் கூறுகின்றனர். ஆனாலும் இராணுவத்தினர் ஜங்கரனைத் தேடித்திரிகின்றனர் என்று தகவல் அறிந்த ஜங்கரன் சுமார் 5 மாதங்களாக மறைந்திருந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்த நிலையிலேயே அவர் சட்டத்தரணி சந்திரசேகர் மூலமாக பருத்தித்துறைப் பொலிஸில் கடந்த திங்கட்கிழமை சரணடைந்திருந்தார். பொலிஸார் அவரை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நீதிவானிடம் முற்படுத்தினர்.


அவரை அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தவேண்டும் என்று பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். எனினும், அது முறையற்ற விண்ணப்பம் என்று சட்டத்தரணி மறுத்தார்.

இருதரப்பு நிலைமைகளையும் ஆராய்ந்த பின்னர் சந்நேகநபரை 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (து-26)

# யாழ். தென்னைகளில் வண்டுகளின் தாக்கம்
## தென்னைப் பயிர்ச் செய்கை சபை கட்டுப்படுத்த இரு வழிகளையும் கூறுகிறது

யாழ்ப்பாணம், மே 14

**யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் தென்னை மரங்களில் கறுப்பு மற்றும் செவ்வண்டு தாக்கம் பரவலாக இனம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய தென்னைப் பயிர்ச் செய்கை சபை தெரிவித்துள்ளது.**



வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக இந்த வண்டுகளின் தாக்கம் தற்போது ஆனைக்கோட்டை, நவாலி, அரியாலை, சாவகச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் அவதானிக்கப்பட்டுள்ளது.

தென்னை உள்ள நிலப்பரப்பு அசுத்தமாகக் காணப்படல், தென்னை, பனை மரங்களின் குற்றிகள் வளவில் காணப்படுதல், மாட்டு சாணம் காணப்பட்டால் வண்டுகளின் இனப்பெருக்கம் அதிகமாக காணப்படும். தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் அறிவுரைகளைப் பின்பற்றி தென்னம் கன்றுகளுக்குப் பசளையிட வேண்டும். தென்னம் கன்றுகளின் மேலாக பசளையை அள்ளிக்கொட்டும் நிலை தற்போது காணப்படுகிறது. இந்த நிலைமையால் வண்டுகள் இலகுவாக பரம்பல் அடையும். ஒரு வயது முதல் சுமார் 3 வயது வரையுள்ள தென்னம் கன்றுகளை கறுப்புவண்டும், வளர்ந்த தென்னை மரங்களில் செவ்வண்டும் தாக்கும். இதனைக் கட்டுப்படுத்துவதற்கு தென்னம் கன்றுகளில் கழிவொயிலை தடவி விடலாம். தோப்பு போன்றவற்றில் வளர்த்த மரங்களில் வண்டுத் தாக்கம் இருந்தால், 'வேட்டைக்கோ', என்ற மருந்து பயன்படுத்தலாம். இது மருந்துக் கடைகளில் கிடைக்கும். இந்த மருந்தை மூன்று கிழமைகளுக்கு ஒரு தடவை விசிறினால் போதுமானது. அத்துடன் தென்னை மரம் உள்ள வளவை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (து-7)

# பொது மலசல கூடத்தால் கொரோனா பரவாதா?

வவுனியா, மே 14



வவுனியா பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக அமைந்துள்ள நகரசபை பொது மலசலகூடம் சுகாதாரச் சீர்கேடாகவுள்ளது. அது போன்ற மலசலகூடங்களால் கொவிட்19 வைரஸ் பரவாதா என்று பொதுமக்கள் கேட்கின்றனர்.

குறித்த மலசல கூடத்தில் எச்சில் குப்பைகள், புகையிலை மிகுதித் துண்டுகள் போன்றன நிறைந்துள்ளன.

கொவிட் 19 வைரஸ் தாக்கம் எச்சில்கள்மூலமாகவும்பரவும்என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். எனவே வவுனியா நகர பொது மலசலகூடம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நகர சபையினர் இதில் கவனம்செலுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்படு கின்றது.

இந்த நகரசபை மலசல கூடத்தில் அங்கவீனர்களுக்கு என ஒதுக்கப்பட்ட மலசலகூடமும் பாவனைக்கு ஒவ்வாத வகையில் பழுதடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (து-18)

# தோட்டத்தில் கைக்குண்டு

சாவகச்சேரி, மே 14

தோட்டம் செய்யப்பட்ட காணியில் செய்கை பண்ணப்படாத சிறிய நிலப்பகுதியில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு நேற்று அடையாளம் காணப்பட்டது.

சாவகச்சேரி வடக்கு சோலையம்மன் கோவிலடியில் உள்ள தோட்டத்தில் நேற்றுத் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டபோது, குண்டுஅடையாளம்காணப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் மற்றும் படையினருக்கு அறிவிக் கப்பட்டது.

அங்கு வந்த பொலிஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். காணித் துண்டைப் பண்படுத்தியபோது, மண்வெட்டியில் ஏதோ பொருள் தட்டுப்பட்டு வெளியே வந்தது. அதனை எடுத்துப் பார்த்த போது கைக்குண்டு எனத் தெரிந்ததால் பொலிஸாருக்குத் தக்வல் தெரிவிக்கப்பட்டது என்று விவசாயி தெரிவித்தார். (க-9)

# போக்குவரத்துச் சங்க கட்டடம் தரைமட்டம்!
## மன்னார் நகர சபைத் தலைவர் உட்பட சிலருக்கு நீதிமன்று அழைப்பாணை

மன்னார், மே 14

மன்னார் நகரத்தில் அமைந்துள்ள மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் எல்லைக்குள் மன்னார் நகர சபைத் தலைவரோ செயலாளரோ அல்லது அவர்களின் ஊழியர்களோ செல்ல மன்னார் மாவட்ட நீதவான்மன்று தடை விதித்துள்ளது.

மன்னார் மாவட்ட தனியார் வாடகை போக்குவரத்து சங்கத்தின் கோரிக்கைகளை உதாசீனம் செய்த மன்னார் நகர சபைத் தலைவர் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும்போது சட்டத்துக்கு முரணான முறையில் அவரின் குழுவினருடன் சென்று சங்கத்தின் கட்டடத்தை தரை மட்டமாக்கியதுடன், சொத்துகளுக்குச் சேதத்தை ஏற்படுத்தினார். இது குறித்து மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையீடுகள் செய்யப்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் மன்னார் மாவட்ட தனியார் வாடகை போக்குவரத்துச் சங்கம், சட்டத்தரணிகள் ஊடாக மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தை நாடியிருந்தது. இந்த நிலையிலேயே 'நீதிமன்று இந்த உத்தரவை வழங்கியுள்ளது.

இது விடயமாக மன்றில் நகர்த்தல் பத்திரங்களைத் தாக்கல் செய்து மூத்த சட்டத்தரணி பா.டெனிஸ்வரன் பாதிப்படைந்துள்ள மன்னார் மாவட்ட தனியார் வாடகை போக்குவரத்துச் சேவைச் சங்கத்தின் சார்பில்தனது சமர்ப்பணத்தை மன்றில் முன்வைத்தார்.

அவருடைய சமர்ப்பணங்களைச் செவிமடுத்த மாவட்ட நீதிபதி, எதிரியாளர்களோ அவர்களின் உத்தியோகத்தர்களோ அல்லது அவர்களின் ஏவலாளிகளோ குறித்த '40 பேர்ச்' ஆதனத்தில் உள் நுழையக்கூடாது. எதிரிகளுக்கு அழைப்பு கட்டளை அனுப்பவேண்டும். இடைக்கால தடை உத்தரவுக்கான அறிவுறுத்தலை அனுப்பவேண்டும். என்று மன்றின் பதிவாளருரை பணித்தார். வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ப-56,60)

# தனியார் பஸ் சேவைக்கு அரசின் உதவிகள் தேவை
## பஸ் கம்பனிகளின் இணையம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே 14

மீண்டும் பொதுமக்களுக்குரிய சேவையை வழங்குவதற்கு அரசின் உதவிகளுடன், சில அனுமதிகளுக்குக் காத்திருக்கின்றோம் என்று யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரசால் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளால், மக்கள் நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளனர். அதற்கு தனியார் போக்குவரத்துத்துறை சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். யாழ். மாவட்டத்திலுள்ள 600 தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள், நடத்துநர்கள், பணியாளர்கள் என சுமார் 2 ஆயிரம் பேர் இந்தக்கால கட்டத்தினுள் வருமானமின்றி உள்ளனர். அவர்களுக்கு நிவாரணம் வழங்க உதவ வேண்டும்.

இத்தனை நாள்களாக வருமானமின்றி உள்ள நிலையில், சேவையில் ஈடுபடும்போது எரிபொருள் மற்றும் வாகனத் தேய்மானத்தையும் ஈடுசெய்ய முடியாத நிலை ஏற்படுவதுடன், சாரதிகள் நடத்துநர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை ஏற்படும். இதனாலேயே தற்போது சேவையில் ஈடுபட முடியாதுள்ளோம்.

இருக்கைகளில் மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்வதனால், அரைச் சொகுசு பஸ் வண்டிகளுக்கு அறவிடப்படும் கட்டணத்தை அறவிடுவதற்குரிய அனுமதியையும், எரிபொருளை மானிய அடிப்படையிலும் வழங்கும் போது, எமது நிலைமையை ஓரளவு சமாளித்து பயணிகளுக்குச் சேவையாற்ற உதவியாக இருக்கும்.

மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாகவே தற்போது வரை எம்மால் பயணிகளுக்குரியசேவையைவழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மீண்டும் நாம் பொது மக்களுக்குரிய சேவையை வழங்கு வதற்தாக அரசின் உதவிகளுடன் கூடிய அனுமதியை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் - என்றுள்ளது. (க)

# எம் தமிழின் மீது ஆணையாக சுமந்திரனை கட்சியிலிருந்து வெளியேற்றியே தீருவோம்

## தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி ஆவேசம்

யாழ்ப்பாணம், மே 14

**எம் தமிழினமே இனியும் நீ தூங்கி விடாதே இனியும் நீ தூங்கி விட்டால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் ஏலத்தில் தமிழினத்தை விற்றுவிடுவார். தமிழ் அரசுக் கட்சியில் இருந்து சுமந்திரனை வெளியேற்றியே தீருவோம். இது எம் தமிழின் மீது ஆணை. இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணி தெரி வித்துள்ளது.**

இது தொடர்பில் மகளிர் அணியின் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் சி. விமலேஸ்வரி அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

தர்மம் என்ற சொல்லை உச்சரிக்கத் தகுதியில்லாதவர், இது வரை காலமும் நம் மக்களை ஏமாற்றி வந்து நேர்காணலில் கூறியவை நாட்டாமை அரசியலின் உச்சக்கட்டம். ஒரு நேர்காணல் மட்டும் வெளிச்சத்துக்கு வந்தது. வெளிச்சத்திற்கு வராத சதித்திட்டங்கள் எத்தனை? தமிழ்த் தேசியத்தை விலை பேசி விற்பதற்கான சூழ்ச்சிகள் எத்தனை? தமிழ் அரசுக் கட்சியில் சுமந்திரன் இருக்கும் வரை தமிழ் மக்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாது என்று இரண்டு மாதங்களுக்கு முன்பு தமிழ் அரசுக் கட்சி மகளிர் அணி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தது. நேர் வழியில் வராமல் குறுக்கு வழியில் வந்து நாட்டாமை அரசியல் செய்ய யார் இடம் கொடுத்தது?

தர்மம் என்றால் என்னவென்று தெரியுமா? தமிழ் மக்களுடன் கூட இருந்து தமிழ் மக்களுக்கே குழி பறித்த சுமந்திரனை, தமிழினத்தால் கொடுக்கப்பட்ட தியாகங்க ளும் தர்மங்களும் தான் காப்பாற்றியுள்ளன. தேவலோகத்திலிருந்து அமிர்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் என்று சொன்னாலும் இனிமேல் அவரிடம் அதனை தன்மானம் உள்ள தமிழ் மக்கள் வாங்க மாட்டார்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும் . அரசாங்க கட்சி தமிழ் வேட்பாளர்கள் கூட விடுதலைப் போரை விமர்சித்தது கிடையாது. தான் ஆடாவிட்டாலும் தசை ஆடும் என்பார்கள். இவர் தமிழர் வரலாற்றில் இருந்து நீக்கப்பட வேண்டிய ஒருவர். 2009ஆம் ஆண்டிற்குப் பின் தமிழ் தேசியம் என்ற போர்வையுடன் வெறும் வாயை மென்று கொண்டு பின் கதவால் வந்தவருக்கு விடுதலையை விமர்சிக்க என்ன அருகதை இருக்கிறது. சுமந்திரனின் தனிப்பட்ட கருத்து என்று யாரும் அதற்கு சாயம் பூசி பிழையைச் சரியாக்க முற்பட்டால் விபரீத விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும். அதர்ம வழியில் போன அவரை தர்மம் எப்படி தூக்கி வீசி இருக்கிறது தெரியுமா? ஓடுமீன் ஓட உறுமீன் வரும் வரைக்கும் வாடியிருக்குமாம் கொக்கு போல் தன்னுடைய நிகழ்ச்சி நிரலை பூரணப்படுத்தும் வரைக்கும் எத்தகைய அவமானங்கள் ஏற்பட்டாலும் அதனை சகித்துக் கொள்ளக்கூடிய நிலையில் தான் அவரது நடவடிக்கைகளும் நகர்வுகளும் காணப்படுகிறன. இதனால் தான் தமிழ் அரசுக்கட்சிக்கு இவரது வருகையை தமிழினத்தின் சாபக்கேடு என்று அன்றே சொல்லியிருந்தேன். அரசன் அன்றறுப்பான்! தெய்வம் நின்றறுக்கும்! உண்மைகளை பொய்யாக்கியவனை தெய்வம் அறுத்துப்போட்டுவிட்டிருக்கு. எம் தமிழினமே இனியும் நீ தூங்கி விடாதே. இனியும் நீ தூங்கி விட்டால் ஏலத்தில் தமிழினத்தை விற்றுவிடுவார்.

தமிழ் அரசுக் கட்சியில் இருந்து சுமந்திரனை வெளியேற்றியே தீருவோம். எம் தமிழின் மீது ஆணை -என்றார். (ப)

# ரோசம் இருந்திருந்தால் சுமந்திரன் தேசியப் பட்டியலில் வந்திருக்ககூடாது

## முன்னாள் எம்.பி யோகேஸ்வரன் காட்டம்

மட்க்களப்பு, மே 14

விடுதலைப்புலிகளின் போராட்டத்தையும், நடவடிக்கையையும் ஒரு நாளும் ஏற்கவில்லை எனக் கூறும் சுமந்திரன் ரோசம் இருந்திருந்தால் 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்றிருக்கக் கூடாது என மட்டக்களப்பு மாவட்ட முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொழும்பில் ஐந்து வயது முதல் வாழ்ந்து சிங்கள நண்பர்களுடன் உண்டு உறவாடி வளர்ந்து வசித்து வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தமிழ்த் தேசிய உணர்வு இருக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள் தனம். 2015இல் யாழ் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூலம் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட்டு இருக்கக் கூடாது, இந்தத் தடவையும் தேர்தலில் போட்டியிடாமல் கௌரவமாக ஒதுங்கி இருக்கவேண்டும். விடுதலைப் புலிகளின் கொள்கையை ஏற்காவிட்டால், அவர்களின் ஆயுதப் போராட்டத்தை ஏற்காவிட்டால், புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எப்படி உறுப்பினராகவோ, நாடாளுமன்ற உறுப்பினராகவோ, போதாக்குறைக்கு ஊடகப் பேச்சாளராகவோ இருக்க முடியும். புலிகளின் போராட்டம் இல்லை எனில், எப்படி சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக வந்திருக்க முடியும். எப்படி ஐ.நா சபை, சர்வதேசம் என அவர் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டிருக்க முடியும். எப்படி புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்பை ஏற்படுத்தியிருக்க முடியும்.

இலங்கை தேசியக் கொடி, தேசிய கீதம், எல்லாம் ஏற்றுக் கொண்டுள்ள ஒருவர் முடிந்தால் கொழும்பில் தேர்தல் கேட்டு வெல்ல முடியுமா? நூறு வாக்குகளைக் கூட கொழும்பில் பெற முடியுமா? வாக்குகளை பெற மட்டும் வடக்கு கிழக்கு தாயகம் மற்றதெல்லாம் கொழும்பு வாழ்க்கை.

பதவியைக் காப்பாற்ற புலிகளின் புகழார நடிப்பே தவிர சிங்கள ஆட்சியாளர்களுடைய நல்லபெயரை சம்பாதிப்பது அவரின் நோக்கம். இந்த இரட்டைவேட அரசியலே இவரின் வாழ்க்கை. கட்சித்தலைமை இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேலாவது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவதை அவர் உடனே நிறுத்த வேண்டும் - என்றார். (ப-150)

# விடுதலைப் போராட்டத்தை கொச்சைப்படுத்த வேண்டாம்

## சட்டத்தரணி டினேஸன் வேண்டுகோள்

மன்னார், மே 14

சிங்கள மக்கள் மத்தியில் தன்னை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காகவே எம். ஏ. சுமந்திரன் விடுதலைப் போராட்டத்துக்கு எதிரான கருத்துக்களைக் கூறி வருகிறார் என்று தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி உபதலைவரும் சட்டத்தரணியுமான செல்வராஜா. டினேஸன் தெரித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுமந்திரனின் இவ்வாறான கருத்துக்களுக்கு தமிழ் மக்கள் ஆகிய நாம் அதிர்ச்சி அடையத் தேவையில்லை. ஏனென்றால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தமிழ் மக்களின் போராட்டங்களைக் கொச்சைபடுத்துவதையும் விமர்சிப்பதை யும் வழக்கமாகக் கொண்டுள்ளார் ஆனாலும் இம் மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் படுகொலை நிகழ்வை ஒட்டு மொத்த தமிழ் மக்களும் உணர்வு பூர்வமாக நினைவு கூர இருக்கின்ற இந்த நிலையில் அவர் இவ்வாறு கருத்துக்களைக் கூறியுள்ளமை தமிழ் மக்கள் மற்றும் தமிழ் தேசிய வாதிகள் மத்தியில் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கல்வி மான். அறியாதவர் அல்ல . அறிந்திருந்தும் சிங்கள மக்களைத் திருப்திபடுத்த வேண்டும், இலங்கையின் பெரும்பான்மை இன மக்களிடம் தன்னுடைய மேலாண்மையைக் காட்ட வேண்டும் தான் சிங்கள மக்கள் மத்தியில் பிரபலமான நபராக வரவேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையிலேயே சிங்கள ஊடகங்களுக்கு தமிழர்களின் போராட்டங்களை விமர்சித்துக் கொச்சைப்படுத்தும் கருத்துக்களை முன்வைத்துள்ளார்-என்றார். (ப-213)

# ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியதை சுமந்திரன் தவிர்த்திருக்கலாம்

## சி.வி.கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கொண்டு ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவதை சுமந்திரன் நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம். தவிர்த்திருக்க வேண்டும் என்று வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

எனது கருத்து சுமந்திரனின் சிங்கள மொழியிலான பேட்டியை முழுமையாகப் பார்த்து கேட்ட பின்னரானது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன். ஊடகவியலாளர் அறிமுகம்செய்யும்போது "யாழ்ப்பாண மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்" என்றே அறிமுகம் செய்துள்ளார். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவரைக் கூட்டமைப்பின் பேச்சாளர் என்று அறிமுகம் செய்யவில்லை. சுமந்திரனும் அவ்வாறு கூறவில்லை. ஆகவே இப்பேட்டியில் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் அவரது தனிப்பட்ட கருத்துக்களே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதோ தமிழ் அரசுக் கட்சியினதோ அல்ல என்பது தெளிவானது. அவரது கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னதும் தமிழரசுக் கட்சியினதும் கருத்தாக சிலர் விமர்சிக்க முனைவது பொருத்தமற்றதும் தவறானதுமாகும்.

இந்தப் பேட்டியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய விடயம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புத் தொடர்பானது. இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது கேள்வியாளர் தேசிய தலைவரது அரசியல் போராட்டம் மற்றும் ஆயுதப்போராட்டம் ஆகிய இரண்டு போராட்டங்கள் பற்றி கேள்வியெழுப்பிய போது இரண்டையும் நிராகரித்த சுமந்திரன் ஆயுதப் போராட்டம் பற்றி மட்டுமே பதிலளித்துள்ளார்.

தமிழின வரலாற்றில் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் போராட்டம் மிகவும் இன்றியமையாத அம்சமாக எப்பொழுதும் இருந்துள்ளது. அந்த அம்சம் தொடர்பாக பதிலளிக்காமல் ஆயுதப் போராட்டம் குறித்து மட்டும் சுமந்திரன் பதிலளித்தமை இந்த சர்ச்சைக்கான காரணியாக அமைந்துள்ளதாகவே நான் கருதுகிறேன்.


பேட்டியில் கேட்டப்பட்ட தேசியக்கொடி, சமஷ்டி முறைமை போன்றவற்றுக்கு விளக்கமளித்தது போன்று தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான இந்தக் கேள்விக்கும் விளக்கமளித்திருந்தால் பிரச்சினை எழுந்திராது.

இலங்கைக்குள்ளேயே முடக்கிக் கிடந்த எமது அரசியல் போராட்டத்தை தந்தை செல்வநாயகம் மற்றும் அமரர் அமிர்தலிங்கம் போன்றவர்கள் இந்தியாவரை முன்னெடுத்தபோது அதனை சர்வதேச மயப்படுத்தியது விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்தான் என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆயுதப் போராட்டம் ஒன்றும் உலகுக்கு புதிதானது அல்ல. பலநாடுகளின் வரலாறு ஆயுதப் போராட்டங்களுடன் தான் தொடர்புபட்டது. அதுவும் எமது போராட்ட வடிவங்களில் ஒன்றாக இருந்தது. அதேநேரம் அரசியல், இராஜதந்திர அணுகுமுறைகளையும் விடுதலைப் புலிகள் முன்னெடுத்தே வந்துள்ளனர் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

ஆயுத வடிவப் போராட்டத்தில் சுமந்திரன் உடன்படாதிருக்கலாம். அது அவரது தனிப்பட்ட உரித்தாக இருக்கலாம். அந்தப் போராட்டத்தின் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை வேட்கை வெளியுலகுக்கு பகிரப்பட்டு ஆதரவு பெற்ற நிலையோடு தொடர்புபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக இருந்து கொண்டு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கூறுவதை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம், தவிர்த்திருக்கவேண்டும் - என்றார். (ப-111)

# சுமந்திரன் தமிழரசில் நீடித்தால் சம்பந்தன், மாவையின் பலவீனமே!

## ரெலோ, புளொட் மீதும் சிவசக்தி ஆனந்தன் சீற்றம்



**வவுனியா, மே.14**

**தமிழின உரிமைப் போராட்டத்தின் ஓரங்கமான விடுதலைப் போராட்டத்தை இவ்வளவு மோசமாகக் கொச்சைப்படுத்திய பின்னரும் சுமந்திரன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் நீடித்தால் அது அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர் இரா.சம்பந்தன், தலைவர் மாவை.சேனாதிராஜாவின் முதுகெலும்பற்ற பலவீனத்தன்மையையே வெளிப்படுத்துவதாக இருக்கும் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

கூட்டமைப்பின் பேச்சாளராக சுமந்திரன் வெளியிட்ட கருத்துக்களின் ஆழத்தினையும் பின்னணியினையும் நன்கறிந்த ஆயுதவிடுதலைப் போராட்டவழி வந்த ரெலோ, புளொட் தரப்புக்கள் வெறுமனே கண்டன அறிக்கைகளுக்கு அப்பால் இந்த விடயத்தில் தீர்க்கமான முடி வெடுப்பதற்கு திராணியிருக்கின்றதா?.

தந்தை செல்வா முதல் அமிர்தலிங்கம் வரையில் சாத்வீக ரீதியாக முன்னெடுத்த போராட்டங்களின் மீதான அடக்குமுறையும், கையறு நிலையுமே 1976இல் வட்டுக்கோட்டையில் தனிஈழத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதனைநோக்கிய ஆயுத போராட்டம் முன்னெடுக்கப்படுவதற்கு காரணமாகியிருந்தன. தமிழ்த் தலைவர்கள் ஆயுதரீதியான விடுதலைப் போராட்டத்தினை அப்போதைய இளைஞர்களிடத்தில் ஒப்படைத்தனர்.

தமிழின விடுதலைக்காக ஆயுதப் மேந்திய அனைத்து இயக்கங்களிலும் தங்களை இணைத்துக்கொண்ட ஒவ்வொரு தமிழ் மகனும் தன் அன்புக்குரியவர்களை விட்டுப் பிரிந்து அடுத்த சந்ததியினர் உரிமைகளுடன் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்வதற்கு தயாராகவே இருந்துள்ளார்கள். அவ்விதமாகவே செயற்பட்டுள்ளார்கள். இதில் ஆயுத விடுதலைப் போராட்டத்தை மூன்று தசாப்த நீட்சியை தமிழீழ விடுதலைப்புலிகள் பதிவு செய்துள்ளார்கள் என்பதே வரலாறு.

ஆயுதப் போராட்டத்துக்கு பிள்ளையார் சுழியிட்டு தீர்மானங்களை எடுத்த (சுமந்திரன் அங்கம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின்) பெருந்தலைவர்களான தந்தை செல்வாவும், அமிர்தலிங்கமும் வழிநடத்திய தமிழ் அரசுக்கட்சிக்குள் இருந்துகொண்டு, அவர்களை முட்டாள்கள் என்று கூற விளைகின்றாரா? ஆயுதப்போராட்ட காலத்தில் போராட்டம் பற்றி எதுவுமறியாது. எந்தப் பங்களிப்பும் செய்யாது, கொழும்பில், குளிர் அறைகளில் படுத்துறங்கி ஒருதுளி வியர்வை சிந்தாது இருந்து அரச, அரசசார்பான தரப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் வருமானம் ஈட்டிவிட்டு ஆயுத விடுதலைப் போராட்டம் மௌனிக்கப் பட்டதும் புற்றீசல் போன்று வெளியில் வந்து அரசியல் களம்புகுந்த சுமந்திரனுக்கு தமிழினத்தின் வரலாறும், இளைஞர்களின் வலிகளும், தியாங்களும், ஈகங்களும் தெரியுமா?

மெல்லமெல்ல ஆயுதப் போராட்டத்தின் மீதும், ஆயுத இயக்கங்கள் மீதும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி ஈற்றில் சிங்களத்தின் ஒற்றையாட்சிக்கு மண்டியிட்டு சுகபோகங்களை அனுபவிப்பதே சுமந்திரனின் திரைமறைவு நிகழ்ச்சி நிரலாக இருக்கலாம். அதற்காக ஒட்டுமொத்த தமிழினத்தினையும் பலிக்கடாவாக்குவதற்கு இடமளிக்கமுடியாது.

தமிழரசுக் கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் பேச்சாளராக விளங்கும் சுமந்திரன் வெளியிடும் கருத்துக்கள் அவரின் தனிப்பட்ட கருத்துக்களே என சம்பந்தனும் மாவையும் எப்போதும் கூறிவருவது நகைப்பிற்கிடமானதே. மரணித்த மாவீரர்களின் உடலங்களின் மீது நின்று வாக்குகளுக்காக அரசியல் செய்கின்ற நிலையில் தமிழ் அரசுக் கட்சிஉள்ளதென்றவரலாற்றுக்கறையை சுமப்பதைத் தவிர்க்கவே முடியாது போகும். அதுமட்டுமன்றி விடுதலைப் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தி வரும் சம்பந்தன் சுமந்திரன் மீது தமிழரசுக்கட்சி நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயலாதிருக்குமாயின், பலவீனமான தமிழ் அரசுக் கட்சியானது மீண்டும் ஒருமுறை முதுகெலும்பற்ற பலவீனமான அரசியல் கட்சி என அம்பலமாகுவதை தவிர்க்கவே முடியாது - என்றுள்ளது. (ப-110)

# தமிழீழ விடுதலை வரலாறு சுமந்திரனுக்குத் தெரியாது

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் தெரிவிப்பு

தந்தை செல்வா தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வந்த அறவளிப்போராட்டங்களின் அதிஉச்ச வடிவம் தான் தமிழீழ விடுதலைப்புலிகளினுடைய ஆயுதப்போராட்டம் என்று தெரிவித்த ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இகதீர் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எம்.ஏ.சுமந்திரனுக்கு தமிழீழ விடுதலை வரலாறு என்பது தெரியாது என்றும் தெரிவித்தார்.

ஜனநாயகபோராளிகள்கட்சியின்ஊடக சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமைவிசுவமடுபகுதியில் நடைபெற்றுள்ளது. இந்த சந்திப் பின்போது அவர்மேலும்தெரிவித்ததாவது;

சமகாலத்தில் சர்ச்சைக்குரிய விடயங்களான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரனுடைய கருத்துக்கள் மக்கள் மத்தியிலும் முன்னால் போராளிகள் மத்தியிலும் சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கின்றது. தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பது தமிழீழ விடுதலைப்போராட்ட இயக்கத்தை தழுவியது. தற்போது தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினராகவும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளராகவும் உள்ள சுமந்திரன் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்பாகவும் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் தொடர்பாகவும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

கடந்த காலங்களில் சுமந்திரன் சகோதரப் படுகொலை என்ற ஒரு விடயத்தை முன்வைத்தார். அந்தக்காலத்தில் தமிழ்மக்களின் கொள்கைகளைக்காட்டிக்கொடுத்தார்கள், இளைஞர் யுவதிகளைக் கடத்தினார்கள், பல சமூகவிரோத செயற்பாடுகளை முன்னெடுத்த சில மாற்று இயக்க உறுப்பினர்களுக்கு அதிஉச்சபட்ச தண்டனையான மரணதண்டனையினை எங்கள் இயக்கம் வழங்கி இருந்தது. இது சகோதரப்படுகொலை அல்ல இவ்வாறு சகோதரப் படுகொலை என்று சுமந்திரன் சொல்லி வந்த கருத்தினையும் வன்மையாக கண்டிக்கின்றோம். அடிமைகொள்ளப்பட்ட ஒரு இனத்திற்கு ஆதரவாக முன்னெடுக்கப்படுகின்ற அறவளிப்போராட்டங்கள், அகிம்சைப் போராட்டங்களின் உச்சவடிவம்தான் ஆயுதப்போராட்டமாக பரினாமம் பெறுவது. இந்த வகையில் தமிழீழ விடுதலைப்போராட்டமும் தந்தை செல்வா தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வந்த அறவழிப்போராட்டங்களின் அதிஉச்ச வடிவம்தான்.

தென்னிலங்கை அரசியல் வாதிகளுடன் ஒன்றாக இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக என்னென்ன திட்டங்களை வைத்துள்ளார்களோ அந்தத் திட்டங்களுக்கு ஏற்றமாதிரி வேலை செய்துகொண்டு எங்கள் கூட்டமைப்பிற்குள் இருந்து கொண்டு தமிழ்மக்களுக்கு எதிரான கருத்துக்களை சொல்லிக்கொண்டிருப்பவர்களை நாங்கள் விட்டுவைக்க முடியாது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினையும் தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களையும்நேசிக்கின்ற தமிழ்மக்கள் தொடர்ந்தும் இவ்வாறான சர்ச்சைக்குரிய நபர்களை மக்கள் பிரதிநிதிகளாக்கி தேசியத்தை அழிக்க முயற்சி செய்யவேண்டாம் - என்றார். (ப-19)

# சுமந்திரனை கட்சியிலிருந்து முடிந்தால் வெளியேற்றுங்கள்

## பங்காளிக் கட்சிகளுக்கு வியாழேந்திரன் சவால்

மட்டக்களப்பு, மே 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துகொண்டு விடுதலைப்புலிகள் தொடர்பில் சுமந்திரனும் சம்பந்தனும் தெரிவிக்கும் கருத்துகள் தொடர்பில் விமர்சனங்களைச் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் முடியுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறட்டும். அவ்வாறு இல்லாவிட்டால் சுமந்திரனை கட்சியில் இருந்து வெளியேற்றிக்காட்டட்டும் என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவித்ததாவது;

விடுதலைப்புலிகளின் போராட்டம் தொடர்பில் சிங்கள சிவில் அமைப்புகளும் சில சிங்களக் கட்சிகளும், சில சிங்கள அமைச்சர்களும் நல்ல கருத்துகளைக் தெரிவித்துள்ள நிலையில் விடுதலைப்புலிகளின் தலைவர் போட்ட பிச்சையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் வந்தவர்கள் அதனை விமர்சனம் செய்கின்றனர். சுமந்திரனின் வழிகாட்டியாக ரணில் இருப்பதன் காரணமாகவே அவர் சிங்கள மக்கள் மத்தியில் ஒரு கருத்தினையும் தமிழ் மக்கள் மத்தியில் இன்னொரு கருத்தினையும் தெரிவித்துவருகிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது சுமந்திரனால் வழிநடத்தப்படும் ஐக்கிய தேசிய கட்சியின் ஒரு பங்காளிக் கட்சியாகும் - என்றார். (ப-150)

# சுமந்திரன் யார் என்பதை தமிழர் விளங்கியுள்ளனர்

## கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 14

விடுதலைப் புலிகளைப் பற்றியும் அவர்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பாகவும் சுமந்திரன் வெளியிட்டுள்ள கருத்தானது இதுவரையிலும் சுமந்திரன் யார் என்பதை தெரிந்து கொள்ளாத தமிழ் மக்கள் மிகவும் தெட்டத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வழி செய்துள்ளது. அவருக்கான பாடத்தை தமிழ் மக்கள் வெகுவிரைவில் படித்துக் கொடுப்பார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உண்மையிலேயே சுமந்திரன் நல்லவர். உள்ளொன்றும் புறமொன்றும் வைத்துப் பேசுபவர் அல்லர். அவர் மனதில் உள்ளதை உள்ளவாறு உள்ளார்ந்த ரீதியில் வெளிப்படையாகப் பேசியுள்ளார். விடுதலைப் புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத அமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சுமந்திரன் சிங்கள வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தன்னுடைய தனிப்பட்ட உண்மையான கருத்தை சரியாகவும் தெளிவாகவும் பதிவு செய்துள்ளார். அது அவரைப் பொறுத்தவரையிலும் தப்பு இல்லை. ஆனால் அவர் இதுவரையிலும் யார் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் அவரை ஆதரித்து வந்த மக்கள் கூட்டத்தினர் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு ஒரு நல்லதொரு காரியத்தைச் செய்துள்ளார். தமிழ்ச் சமூகம் அவருடைய கருத்துச் சரியானதாகப் பட்டால் அவரை ஆதரிப்பார்கள். இல்லையேல் எவ்வளவு காலமும் எம்மை ஏமாற்றி வந்த ஒரு நபர் என்ற அடிப்படையில் ஒட்டுமொத்தமாக நிராகரித்து விடக்கூடும்.

இப்பொழுது தமிழ்க் கட்சிக்காரர்கள் எல்லோரும் சேர்ந்து சுமந்திரனின் கருத்தானது தனிப்பட்ட கருத்தாகும். அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக எப்படி தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக இதுவரை காலமும் இருக்க முடியும். தமிழ் மக்களின் தோளில் ஏறிப் பயணம் செய்து கொண்டு பெரும்பான்மையினரின் அடிவருடி போல் வேஷம் போடுவது சகிக்க முடியாது. அவருக்குப் பாடம் படிப்பிப்போம். சிங்களதேசியத்துக்குள்வாழ்ந்தசுமந்திரனுக்குதமிழ்த்தேசிய சிந்தனை எப்படி வரும் என இன்னுமின்னும் எத்தனையோ வகையிலான விமர்சனங்களை அவருக்கு எதிராக தமிழ் அரசியவாதிகள் அள்ளி வீசிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் அவர் யார் என்பதை எவ்வளவு காலமும் அறியாமல் இருந்திருக்கிறார்கள் போல் தெரிகின்றது - என்றார். (ப)

# பனையோலை உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்துக

## வவு. பெண்கள் கோரிக்கை

**வவுனியா,மே.14**

**நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று காரணமாக வவுனியா மாவட்டத்தில் பனையோலையில் பொருள்களை உற்பத்தி செய்யும் பல பெண்கள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.**

வவுனியா மாறாஇலுப்பை, ஓயார் சின்னக்குளம் மற்றும் திருநாவற்குளம் பகுதிகளில் உள்ள சில பெண்கள் பிரதேச செயலகங்களின் மூலமாக பன்ன வேலைக்கான தொழிற் பயிற்சியைப் பெற்று தற்போது அத் தொழிலைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள பெண்கள் பனையோலை உற்பத்திப் பொருள்களை உள்ளூரில் மாத்திரமல்ல வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்தும் வந்திருந்தனர். இதன் காரணமாக இவர்களது வருமானம் போதுமானதாகக் காணப்பட்ட போதிலும் தற்போதைய சூழ்நிலையால் ஏற்றுமதி தடைப்பட்டு உற்பத்திப் பெருள்கள் தேங்கிக் காணப்படுவதுடன் உள்ளூரிலும் விற்பனை செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் அவர்களது வருமானம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தமது உற்பத்தி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ள இப் பெண்கள் தமக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி



தரவேண்டும் எனவும் தற்போதைய சூழலில் பாதிக் கப்பட்டுள்ள தமது வாழ்வாதாரத் தொழிலைக் கருத்தில் கொண்டு நிவாரணங்களை வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-110)

# மழை காரணமாக பயிர்செய்கை பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 14

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த மூன்று நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக வெங்காயம் மற்றும் மரங்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. வலி.கிழக்குப் பிரதேசத்தில் குறிப்பாக தாழ்ந்த விவசாயத் தோட்டங்களில் பயிரிடப்பட்ட வெங்காயச் செய்கை மழை வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டது.

இதனைவிட ஏனைய மரக்கறிப் பயிர்களும் கடும் மழையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் நீர்வேலி,கோப்பாய்,சிறுப்பிட்டி,புத் தூர் பிரதேசங்களில் பயிரிடப்பட்ட கீரைச் செய்கையும் வெள்ளம் ஏற்பட்டு பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ஜ-17)

# 600 சமுர்த்திப் பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டத்துக்கான விதை

யாழ்ப்பாணம், மே 14

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் 600 சமுர்த்தி பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டத்தை உருவாக்குவதற்கான விதைப் பைக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று சமுர்த்தி கருத்திட்டப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் "சுபீட்ச த்தின் நோக்கு" சமுர்த்தி மாதிரி வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டம் 2020 திட்டத்திலேயே இவ்வாறு விதை பைக்கற்றுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இப்பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 30 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் தலா 20 பயனாளிகள் வீதம் 600 பயனாளிகளுக்கான பயற்றை ,வெண்டி , மல்லி விதைகள் அடங்கிய விதைப் பைக்கற்றுக்கள் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாகப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டத்தினூடாக குடும்பத்தின் போஷாக்கை உயர்த்துதல் ,உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், குடும்பத்தின் வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், மேலதிக வருமான வழியொன்றைக் குடும்ப அலகுக்காக உருவாக்குதல், மற்றும் நஞ்சுப் பொருள்களற்ற சுற்றாடல் நேயமிக்க உற்பத்தியின்பால் மக்களை பழக்கப்படுத்துவதுடன் குடும்பத்தின் மேலதிக உழைப்பினை பயனுறுதி வாய்ந்த உற்பத்தி நடவடிக்கையொன்றின் பால் ஈடுபடச் செய்வதும் போசணையுள்ள உணவுவேளை ஒன்றினைப் பெற்றுக்கொள்ள சர்ந்தர்ப்பம் ஒன்றினை ஏற்படுத்திக் கொடுப்பதும் இதன் நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (ப-39)



இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தால், மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதே செயலகங்களின் பாவனைக்காக ஒரு தொகுதி முகக்கவசம் மற்றும் தொற்று நீக்கும் திரவம் என்பன நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸிடம் கையளிக்கப்பட்டன. (க-56)

# யானை தாக்கி பெண் உயிரிழப்பு

திருமலை,மே 14

திருகோணமலை, சம்பூர், தங்கபுரம் பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். தங்கபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண், கூலித் தொழிலின் நிமித்தம் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்த போது, யானையின் தாக்குதலுக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# சுற்றுலாத் துறையினருக்கு நிவாரணம் வழங்க திட்டம்

சுற்றுலாத்துறையின் ஊடாக வருமானத்தை இழந்துள்ள அனைத்து தரப்பினருக்கும் நிவாரணம் வழங்குவதற்கான கோரிக்கை தொடர்பில்,விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலாத்துறை யின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவல் காரணமாக சுற்றுலாத்துறையின் ஊடாக வருமானத்தைப் பெறும் அனைத்து தரப்பினரும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளதாகக் குறிப்பிட்டு, இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.எம்.ஜனுபர்ரூபவ் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷமற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட துறைசார் திணைக்கள தலைவர்களுக்குக் கடிதமொன்றை எழுதியிருந்தார்.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் இவ்வாறு அசாதரண நிலைமையால் பாதிப்படைந்துள்ளனர். ஆகவே இவர்களுக்கு ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்காகவது தலா 25ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண நிதி வழங்கு வதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்று கடி தத்தில் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(க)

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.03.1924 | 12.05.2020 |

**திருமதி பரிபூரணம் இராசதுரை**

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட பரிபூரணம் இராசதுரை கடந்த (12.05.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்-வியாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜீவானந்தன், காலஞ்சென்ற பத்மினி ஆகியோரின் அன்பு மாமியும், ஜொவிற்றா, சிவசண்முகபிள்ளை ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெனவி, ஜெரோமி, ஜொனத்தன், சிவதர்சன்- துளசிதா, சிவாஞ்சலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.05.2020) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வத்தனை வளவு,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**சி.சிவசண்முகபிள்ளை**
**(பெறாமகன்)**
**021 224 4083**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12.07.1988 | 09.05.2020 |

**சிறீதரன் சரத்**

Germany Arnsberg இனை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சிறீதரன் சரத் கடந்த (09.05.2020) காலமானார்.

அன்னார் சிறீதரன் (ராஜன்) சறோசினி தம்பதியரின் அன்பு புதல்வரும், சார்ள்ஸின் அன்புத் தம்பியும், சர்மினியின் அன்பு அண்ணனும், மாவின், யூஸ்ரினா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சீலா மேரியின் அன்பு சித்தப்பாவும், காலஞ்சென்றவர்களான மகேசன் தங்கம்மா, சரவணமுத்து நாகேஸ்வரி தம்பதியரின் பேரனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடையார் வளவு,**
**சுன்னாகம்.**

**ஜேர்மனி:**
**ம.சிறீதரன்**
**004917687364931**

**தகவல்:**
**ம.கதாதரன் (சித்தப்பா),**
**077 627 1534**
**சி.வாசுகி (மாமி)**
**சி.துசிஅந்தி (மாமி)**

**நாகபூஷணி திருமண சேவை**

மணமக்கள் அனைவருக்கும்
பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்
(13.05 முதல் 15.05 வரை)
நீங்கள் விரும்பும் மணமக்கள்
ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக
உடன் பெற்றுக்கொள்ளலாம்.
**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**T.P: 021 222 9306, 077 138 7596**

**மணமகள் தேவை**

அரச உத்தியோகம் பார்க்கும்
1972 இல் பிறந்த திருமணமாகாத
நற்பண்புள்ள மணமகனுக்கு
நற்பண்புள்ள மணமகள் தேவை.
**T.P.No: 077 307 3407**

# மக்கள் ஒத்துழைத்தால் கொரோனா நெருங்காது

## அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

பெருந்தோட்டப்பகுதிகளில் கொரோனா நோயாளி எவரும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. எனவே, சுகாதார அதிகாரிகளால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் அதிலிருந்து விடுபடலாம்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் நோயாளியொருவர் அடையாளம் காணப்படும் பட்சத்தில் செயற்பட வேண்டிய விதம் குறித்து நோய் காவு வண்டி சாரதிகள், தோட்ட நலன்புரி அதிகாரிகளுக்கு விழிப்புணர்வும், விளக்கமும் வழங்கும் நிகழ்வு நுவரெலியா சினிசிட்டா மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுத்து மக்களைப் பாதுகாப்பதற்காக சுகாதார அதிகாரிகள் இரவு, பகல் பாராது சேவையாற்றிக் கொண்டிருக்கின்றனர். பெருந்தோட்டத் துறையில் இன்னும் எந்தவொரு நபரும் வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் அடையாளம் காணப்படவில்லை.

தோட்ட மக்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் உறுதியாக நிற் கின்றது. சுகாதார அதிகாரிகளால் வழங்கப்படும் ஆலோசனை களை, அறிவுறுத்தல்களை உரிய வகையில் பின்பற்றி னா லேயே எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் - என்றார். (க)

## மரண அறிவித்தல்



### இளையதம்பி தர்மராஜா

**(ஓய்பெற்ற நல்லூர் பலநோக்கு கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர்)**

யாழ்ப்பாணம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைய தம்பி தர்மராஜா நேற்று (13.05.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி (அதிபர்) அரியரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், தர்மகுமார் (டென்மார்க்), கிரிஜா (லண்டன்), பத்மகுமார் (கனடா), செந்தில்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்றவர்களான அரியநாயகம், யோகராணி, புஸ்பராணி, மகேந்திரராணி மற்றும் சிவராஜா, இந்திராணி, தேவராசா கமலராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், றபிக்கா, கிருஷ்ணரூபன், பிரியதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ரியாஸ், ரிதுசனா, அம்சனா, கருணிகா, சாருஜன், அனஸ்விகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.05.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்தட்டுமட லேன்,**
**கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**021 2053 428**

## வவுனியா மாவட்டத்தில்

# மட்டுப்படுத்தப்பட்ட பஸ் சேவை ஆரம்பம்

வவுனியா,மே 14



வவுனியா புதிய பஸ் நிலையத்திலிருந்து மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர் மற்றும் வடமாகாணம் முழுவதுக்குமான இலங்கைப் போக்குவரத்து சபை பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கிடையிலும், பாலமோட்டை , போகாஸ்வேவ , வீரபுரம் ஊடாக செட்டிக்குளம் , பூவரசங்குளம் ஊடாக மெனிக்பாம் ஆகிய உள்ளூர் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பஸ்களில் அரச, தனியார் உத்தியோகத்தர்கள் மற்றும் பாஸ் உள்ளோர் மட்டுமே பயணிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பஸ்களில் ஆசன ஒதுக்கீடு நடைமுறைகள் பின்பற்றப்படுவதுடன், அனைவரும் முகக்கவசம் அணியுமாறும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. (க-18)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 |  | 13 |
| . | | . |
| 11 | | 05 |
| . | | . |
| 1927 | | 2020 |

### வீ.ந.சோமசுந்தரம்

**(இளைப்பாறிய பிரதம லிகிதர், சாவகச்சேரி நகரசபை, யாழ்.மாநகர சபை)**

மீசாலையைப் பிறப்பிடமாகவும், கனடாவில் வாழ்ந்தவருமான வீ.ந. சோமசுந்தரம் நேற்று (13.05.2020) புதன்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா (ஆசிரியர்), வள்ளியம்மை தம்பதியரின் புதல்வரும், கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தில்லை நடேசபிள்ளை (ஆசிரியர்) அன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமானந்தன், குலசேகரம், வைத்தியநாதன் ஆகியோரின் சகோதரரும், ஸ்ரீமுருகன் (அல்லாரை), ஸ்ரீகாந்தன் (கனடா/உசன்), வேலும்மயிலும் (அமெரிக்கா), சாந்தினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீகதிர்காமநாதன் (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமேஸ்வரி, கலாநிதி, நந்தினி, ஸ்ரீகணேசன், றஞ்சினி, ஞானச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். இவருக்கு 16 பேரப்பிள்ளைகளும், 14 பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2020) வியாழன் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## பெயர் மாற்றம்

கொடிகாமம் பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தை சேர்ந்த **பரமலிங்கம் பகிர்தன்** என்ற எனது பெயரை **பரமலிங்கம் பகீரதன்** என மாற்றப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**ப.பகீரதன்.**

**வீடு வாடகைக்கு**

நல்லூர் கோயில் சுற்றாடலில்
சகல வசதிகளும் கொண்ட வீடு
வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு
**021 221 3549, 0750 415 177**

## சேவைநலன் பாராட்டு



**திரு.இராசரத்தினம் நாகேஸ்வரன் SLTS-I**

சேவை விவரம்:
பது/கொக்காக்கலை தமிழ் வித்தியாலயம் (16.04.1985 - 13.03.1988)
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை (14.03.1988-31.12.1989)
பது/மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம் (01.01.1990-31.01.1996)
யா/நாகர்கோவில் மகா வித்தியாலயம் (01.02.1996-29.02.1996)
யா/நாகர்கோவில் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை (01.03.1996-31.12.1996)
யா/கொடிகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (01.01.1997-02.03.1997)
யா/கெற்பேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (03.03.1997 - 01.08.2010)
யா/போக்கட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (02.08.2010-04.03.2018)
யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் (05.03.2018-13.05.2020)

Congratulations

ஓயாத கல்விச் சேவை கண்டோம் - மேலும்
வளமான வாழ்வு பெற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலனோம்பல் கழகம்**
**யா/மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம்**
**சாவகச்சேரி.**



# செய்மதிகளை ஏவியது சீனா!


பீஜிங், மே 14

விண்வெளி அடிப்படையிலான தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை ஆராய்வதற்காக சீனா இரண்டு செயற்கைக் கோள்களை வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது.

வடமேற்கு மாகாணம் கான்சுவில் உள்ள ஜியாகுவான் செயற்கைகோள் ஏவுதளத்தில் இருந்து, ஜிங்யூன் 01, ஜிங்யூன் 02 ஆகிய 2 செயற்கைகோள் குய்சோ ரொக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த 2 செயற்கைக் கோள்களும் புவி வட்டப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டதாக சீன விண்வெளி ஆய்வு நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம)

## சீனாவால்
# இருபது ஆண்டுகளில் 5 கொள்ளை நோய்கள்
### அமெரிக்கா காட்டமாகக் கருத்து



பீஜிங், மே 14

**சீனாவால்கடந்த ஐந்து ஆண்டுகளில் 20 கொள்ளை நோய்கள் ஏற்பட்டுள்ளன. சீனாவால் முழு உலகமும் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றது. இது நிறுத்தப்பட்டாக வேண்டும் என்று தெரிவித்துள்ளது அமெரிக்க தேசிய பாதுகாப்பு அமைச்சு.**

அமெரிக்கத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் ஓ பிரையன் இது தொடர்பில் தெரிவித்ததாவது: உலகம் நெடுகிலும் மக்கள் எழுச்சி பெற்று சீனாவிடம், 'சீனாவிலிருந்து கிளம்பும் கொள்ளை நோய்களை இனியும் பொறுக்க மாட்டோம்' என்று கூறும் நேரம் வந்து விட்டது. இது பரிசோதனைக் கூடங்களிலிருந்து பரவியிருந்தாலும் விலங்குச் சந்தையிலிருந்து பரவியிருந்தாலும் எதுவாக இருந்தாலும் நல்லதல்ல. கொரோனா வுகானிலிருந்துதான் பரவியது. எங்களிடம் இதற்கான சந்தர்ப்ப சூழ்நிலை ஆதாரங்கள் உள்ளன. கடந்த 20 ஆண்டுகளில் சீனாவிலிருந்து 5 கொள்ளை நோய்கள் பரவியுள்ளன. சார்ஸ், ஏவியன் புளூ, ஸ்வைன் ப்ளூ, கொரோனா என்பவை அவை. சீன மக்கள் குடியரசின் இந்த பயங்கரப் பொதுச்சுகாதார நிலையை உலகம் எவ்வளவு நாளைக்குத் தாங்கும்? அதாவது நான் என்ன கூறுகிறேன் என்றால் ஒரு கட்டத்தில் இதை நிறுத்தியாக வேண்டும். சீன மக்களுக்கு உதவ எங்கள் மருத்துவவல்லுநர்களை அனுப்ப உத்தேசித்தோம் ஆனால் அவர்கள் மறுத்து விட்டனர். வைரஸ் எங்கிருந்து தொடங்கியது என்பதை தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம் - என்றார். (ம)

## கொரோனாவுக்கு தடுப்பூசி
# ஒக்ஸ்போர்ட் ஆய்வு ஊக்கம் தருகின்றது
### பிரிட்டன் பிரதமர் தெரிவிப்பு

லண்டன், மே 14




கொரோனாவுக்கு மருந்து கண்டுபிடிக்கும் வகையில் பிரிட்டனின் உலகப் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் இடம்பெறும் ஆய்வு நம்பிக்கை தரும் வகையில் உள்ளது என்று தெரிவித்துள்ளார் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தடுப்பூசி கண்டறியும் சர்வதேச நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதில் இங்கிலாந்து முன்னணியில் இருக்கிறது. ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் நடக்கும் முயற்சிகள், ஊக்கம் அளிப்பதாக இருக்கின்றன. தடுப்பூசி கண்டறியப்படும் என்ற நம்பிக்கை உள்ளது. ஆனால் அதற்கு உத்தரவாதம் இல்லை' என்றார். (ம)

# ஜூன் இறுதி வரையில் மூடப்படும் நியூயோர்க்!

வொஷிங்டன், மே 14

கொரோனா பரவல் காரணமாக ஜூன் இறுதி வரையில் நியூயோர்க் நகரம் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நியூயோர்க் ஆளுநர் விடுத்துள்ள அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளதாவது:


அமெரிக்காவில் பிற மாகாணங்களைவிட நியூயோர்க் கொரோனா தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தொற்றுக்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ள போதிலும் கொரோனாவின் பரவல் தன்மையைக் கருத்தில்கொண்டு ஜூன் மாதம் இறுதி வரை நியூயோர்க் நகரம் பூட்டப்படும் - என்றுள்ளது. (ம)

# சொலமன் தீவுகளில் நிலநடுக்கம்

லதா, மே 14

தீவுப் பிராந்தியங்களில் ஒன்றான சொலமன் தீவுகளில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. 6.6 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

லதா நகரில் இருந்து 169 கிலோமீற்றர் தொலைவில் 120 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவானது. ஆரம்பத்தில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் பின்னர் அந்த எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்டது. (ம)



# சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தத்துக்கு துளியும் எமக்கு ஆர்வம் கிடையாது
### ட்ரம்ப் மோதல் போக்கு

வொஷிங்டன், மே 14



சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் செய்வதற்கு துளியும் எனக்கும் எனது அரசுக்கோ ஆர்வம் இல்லை - என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்.

வொஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், 'சீனாவுடன் புதிதாக வர்த்தகம் எதையும் செய்து கொள்ள விரும்புகின்றீர் களா?' என்று செய்தியாளர் ஒருவர் வினவியதற்குப் பதில் வழங்குகையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ட்ரம்ப்.

இது தொடர்பில் ட்ரம்ப் மேலும் தெரிவித்ததாவது:

சீனாவுடன் புதிதாக எந்த வர்த்தக ஒப்பந்தத்தையும் செய்து கொள்ள விரும்பவில்லை. கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின்படி அவர்கள் நடந்துகொள்கின்றார்களா என்று பார்ப்போம். புதிதாக எந்த ஒப்பந்தத்தையும் செய்துகொள்ள இம்மியும் விரும்பவில்லை - என்றார். (ம)

# சூதாடினார் ஷபிக்: 6 ஆண்டு தடை!!

காபுல், மே 14
ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் ஷபியுல்லா ஷபிக் சூதாட்டத்தில் ஈடுபட்டதால் அவருக்கு கிரிக்கெட் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட 6 ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் இலக்குக் காப்பாளர் ஷபியுல்லா ஷபிக். 30 வயதான ஷபிக் ஆப்கானிஸ்தான் அணிக்காக சுமார் 70 ஆட்டங்களில் விளையாடியுள்ளார். கடந்த ஆண்டு நடந்த பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ரி20 தொடரின் போது அவர் சூதாட்ட தரகர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு ஆட்டநிர்ணய சூதாட்டத்தில் ஈடுபட முயற்சித்தமை கண்டுபிடிக்கப்பட்டது. விசாரணையில் 2018ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் பிரிமீயர் லீக்கிலும் தில்லாலங்கடி வேலையில் ஈடுபட்டமை தெரியவந்தது. இதையடுத்து அவருக்கு 6 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம)

## மீண்டும் கிரிக்கெட் ஆரம்பித்தால்

# இரண்டு அணிகளை களமிறக்கத் திட்டம்!

### இந்தியா, இங்கிலாந்து, ஆஸி. தீவிர பரிசீலனை என தகவல்

லண்டன், மே 14
கொரோனா அச்சம் முடிவுக்கு வந்த பின்னர் இரண்டு அணிகளைக் களமிறக்க இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபைகள் பரிசீலித்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா அச்சம் காரணமாக தற்போது விளையாட்டு உலகம் முடக்கப்பட்டுள்ளது. இதனால் உலகளாவிய ரீதியில் நடைபெறவிருந்த முக்கிய கிரிக்கெட் தொடர்கள் கைவிடப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவில் நடத்தத் திட்டமிட்ட ரி20 உலகக் கிண்ணத் தொடர்கூட நடைபெறுமா என்பதில் சிக்கல்நிலை தோன்றியுள்ளது. இந்த நிலையில் மீண்டும் கிரிக்கெட் ஆரம்பித்த பின்னர் இரண்டு அணிகளைக் களமிறக்க இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா நாடுகளின் கிரிக்கெட் சபைகள் பரிசீலித்து வருகின்றன. விடபட்ட தொடர்களை நடத்தி முடிக்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2017ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய அணி ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் விளையாடியமை குறிப்பிடத்தக்கது. (ம)

# 4,000 குடும்பங்களுக்கு பசியாற்றுகிறார் சச்சின்



புதுடெல்லி, மே 14
மும்பையில் கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பிறப்பிக்கப் பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் தொழில் இன்றி, வருமானம் இல்லாமல் வாடும் 4 ஆயிரம் ஏழைக்குடும்பங்களுக்கும் குழந்தைகளுக்கும் தன்னார்வ அமைப்பு மூலம் நிதியுதவி வழங்கியுள்ளார் இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின்.

சச்சின் டெண்டுல்கர் மும்பைக்கு வெளியே செயல்படும் லாப நோக்கற்ற அமைப்பான, 'ஹை 5' அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்கியுள்ளார். எனினும் எவ்வளவு தொகை வழங்கப்பட்டது என்பதை சச்சின் தெரிவிக்கவில்லை. மும்பை மாநகராட்சி பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் உட்பட 4,000 ஏழை மக்களுக்கு நிதியுதவி செய்யும் வகையில் இந்த நன்கொடையை சச்சின் வழங்கியுள்ளார். (ம)

# கோலியை விடவும் ரோகித்தை ரசிப்பேன்

### கைப் வெளிப்படை

புதுடெல்லி, மே 14
இந்திய அணியின் தலைவர் கோலி விளையாடுவதைக் காட்டிலும் அந்த அணியின் துணைத் தலைவர் ரோகித் விளையாடுவதுதான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் கைப்.

இது தொடர்பில் கைப் மேலும் தெரிவித்ததாவது:
ஒரே நகரில் 2 ஆட்டங்கள் நடக்கின்றன, ஒன்றில் விராட் விளையாடுகிறார், இன்னொரு ஆட்டத்தில் ரோகித் விளையாடுகின்றார் என்றால் நான் ரோகித் விளையாடும் ஆட்டத்தைப் பார்க்கவே செல்வேன். விராட் கோலி அசைக்க முடியாத சாதனைகளை வைத்துள்ளார். சிறந்த வீரர். ஆனால் ரோகித் சர்மாவின் ஆட்டத்தில்தான் அந்த நளினம், அழகு உள்ளது - என்றார். (ம)



# ஆஸ்திரேலியாவில் ரி20 உலகக்கிண்ணம் நடப்பது சந்தேகமே

### வோர்ணர் வெளிப்படை

சிட்னி, மே 14
ஆஸ்திரேலியாவில் இந்த ஆண்டு ரி20 உலகக்கிண்ணம் நடைபெறுவது சந்தேகம்தான் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலியாவின் முன்னணி வீரர்களில் ஒருவரான வோர்ணர். தனது சமூக வலைத்தளத்தில் இது தொடர்பில் பதிவிட்டுள்ள வோர்ணர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் காரணமாக ஆஸ்திரேலியாவில் இந்த ஆண்டு ரி20 உலகக்கிண்ணம் நடைபெறாது என்று நினைக்கிறேன். 16 அணிகள் ஒன்றிணைவது கடினமானது. கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக ஆஸ்திரேலிய அரசு பிறப்பித்துள்ள உத்தரவுகள் கடுமையாக உள்ளன. இதனால் இந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் விளையாடலாம் என்று கருதவில்லை - என்றார். (ம)



# ஐ.பி.எல்லை நடத்த அரபு இராச்சியம் விருப்பம்

அபுதாபி, மே 14
கொரோனா காரணமாக ஐ.பி.எல் நடைபெறுமா என்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில், ஐ.பி.எல் தொடரை நடத்துவதற்கு ஐக்கிய அரபு இராச்சியம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகரித்ததையடுத்து மார்ச் 29ஆம் திகதி நடைபெறவிருந்த ஐபிஎல் தொடர் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மேலும் ஐபிஎல் போட்டிகள் செப்டம்பரில் நடத்தப்படலாம், வெளிநாடுகளில் நடக்கலாம் என்ற செய்திகள் வெளியாகின. இதனையடுத்து அதிகாரபூர்வமாகச் செய்தி வெளியிட்ட பிசிசிஐ, "நாடு முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பு இருப்பதாலும், ஊரடங்கு உத்தரவு அரசால் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், அடுத்த அறிவிப்பு வரும் வரை 2020ஆம் ஆண்டுக்கான ஐபிஎல் போட்டிகள் ஒத்திவைக்கப்படுகின்றன. கிரிக்கெட் போட்டியைவிட தேசத்தின் பாதுகாப்பு நலனே முக்கியம் என்பதால் பிசிசிஐ மற்றும் ஐபிஎல் அணிகளின் நிர்வாகத்தினர் இணைந்து இத்தகைய முடிவை எடுத்துள்ளோம்" எனத் தெரிவித்தது. இதையடுத்து, தொடரை நடத்துவதற்கு இலங்கை விருப்பம் தெரிவித்திருந்தது. தற்போது ஐக்கிய அரபு இராச்சியமும் தொடரை நடத்த விருப்பம் தெரிவித்துள்ளது. (ம)

**Non Touch Thermometer [Thermoscanner]**

**Wholesale Price Rs.12500.00**

With one year warranty
Minimum purches should be 03 Numbers

**Vanikaa Surgicals**
**Tel-021 222 0077**

## கண்ணீர் அஞ்சலி



மயிலிட்டியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை மற்றும் பெல்ஜியத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நண்பன்

**சுப்பையா பிரதீப்**

சுகயீனம் காரணமாக 12.05.2020 இறைவனடி சேர்ந்தமையினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு நண்பன்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.